OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M.
FERNANDO
580, HOSPITAL ROAD
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

கண் வைத்திய நிபுணர்கள்
பொர்க்க செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 08 ஞாயிற்றுக்கிழமை (22 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 56

# மேலும் 8 பொருள்கள் மீதான தடை நீக்கப்பட்டிருப்பதாக அரசு அறிவிப்பு

## ஏனையவை குறித்து தகவல் இல்லை

கொழும்பு, ஜனவரி 22

வடபகுதி மீதான பொருளாதாரத் தடை மேலும் தளர்த்தப்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்துள்ளது.

எலக்ரோனிக் பொருள்கள், மின்சாரக் கம்பிகள், அலுமினியம், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், தங்கம், இரசாயனப் பொருள்கள், அச்சகப் பொருள்கள், பற்றரிகள் ஆகியன மீதான தடையே நீக்கப்பட்டுள்ளதாக இலங்கை வானொலி நேற்றுத் தெரிவித்தது.

பென்ரோச் பற்றரிகள் மீதான தடை தொடர்ந்து இருக்கும். அதேசமயம் ஏனைய சகல வகையான பற்றரிகள் மீதான தடை நீக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு கடந்த ஒகஸ்ட் மாதம் பதவிக்கு வந்ததும் 28 பொருள்கள் மீதான தடையை நீக்கி இருந்தது

பின்னர் கடைசியாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மூன்றாம் கட்டப் பேச்சுக்களின் போது, தடை விதிக்கப்பட்டுள்ள 29 வகையான பொருள்களில் 22 வகையான பொருள்கள் மீதான தடை நீக்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொருள்கள் இறக்கும் பணி ஆரம்பம்

பருத்தித்துறை துறை முகத்தில் கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கும் பணி நேற்று மீண்டும் ஆரம்பமானது.

''ஹபரண'' கப்பலிலிருந்து மாவும், கோமாரி கப்பலில் இருந்து நிவாரணப் பொருள்களும் இறக்கப்பட்டன.

காலநிலை சீரின்மையால் கடந்த மூன்று நாட்களும் பொருள்கள் இறக்கும் பணி தடைப்பட்டிருந்தது.

மன்னார் நகரில் வைத்து

# விடுதலைப் புலிகள் ஆதரவாளரை "புளொட்" குழு சுட்டுக்கொன்றது!

## மோதல் தவிர்ப்பு மீறல் என்று ஆட்சேபம்

யாழ்ப்பாணம், ஜன. 22

தமிழீழ விடுதலைப் புலிகளின் நீண்டகால உறுப்பினரான பாலச்சந்திரன் என்பவரை மன்னாரில் வைத்து ''புளொட்'' இயக்கத்தினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறுவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு சு.ப. தமிழ்ச்செல்வன் ஜனாதிபதியின் செயலாளர் திரு கே. பாலபட்டபெண்டியிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்

மன்னார் நகரத்தில் உள்ள பாலச்சந்திரன் வீட்டில் வைத்து வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவர் ''புளொட்'' உறுப்பினர்கள் சிலரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் —

அரசாங்கப் படைகளின் ''ஊர்காவல் படையினர்'' எனக் கருதப்படுவோர் இந்தக் கொலையைச் செய்திருப்பதால், இந்த மோதல் தவிர்ப்பு மீறலுக்கு அரசாங்கமே பொறுப்பு ஏற்கவேண்டும் என்றும்— திரு. தமிழ்ச்செல்வன் ஜனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பிய ஆட்சேபக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாரதூரமான சம்பவம் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறும், அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் இது போன்ற சம்பவங்கள் இனிமேல் நடைபெறாமல் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறும்— திரு. தமிழ்ச்செல்வன் தமது கடிதத்தில் கேட்டுள்ளார். (அ)

## கொழும்பில் இருந்து பாப்பரசர் நேற்று மாலை புறப்பட்டார்!

கொழும்பு, ஜன. 22

24 மணி நேர இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் நேற்று மாலை 5 மணியளவில் கொழும்பில் இருந்து இத்தாலிக்குப் புறப்பட்டார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து ஏயர் லங்கா விமானம் பாப்பரசரையும் அவரது குழுவினரையும் இத்தாலி தலைநகர் ரோமுக்கு ஏற்றிச் சென்றது.

நேற்றுக் காலை 8.15 மணியளவில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் மதத் தலைவர்களை சந்தித்த பின்னர் பாப்பரசர் காலிமுகத்திடலுக்கு புறப்பட்டார்.

பாப்பரசர் பயணம் செய்வதற்கென வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட குண்டு துளைக்காத கண்ணாடி பொருத்தப்பட்ட வாகனத்தில் பாப்பரசர் காலை 9.30 மணியளவில் காலிமுகத்திடலை வந்தடைந்தபோது அங்கு கூடியிருந்த கத்தோலிக்க மக்களால் அவர் வரவேற்கப்பட்டார்.

வண. ஜோசப் வாஸ் அடிகளாருக்கு முத்திப்பேறு வழங்கும் ஆராதனை 9.45 மணியளவில் நடைபெற்றது.

(5ஆம் பக்கம் பார்க்க)

## மதத் தலைவர்களை பாப்பரசர் சந்தித்தார்!

### பௌத்த பிக்குகள் பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஜன. 22

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் நேற்றுக் காலை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மதத் தலைவர்களை சந்தித்தார்.

பௌத்த மத தலைவர்கள் எவரும் அந்த வைபவத்தில் கலந்துகொள்ளவில்லை.

மதத் தலைவர்களைச் சந்திப்பதற்காக பாப்பரசர் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்கு வருகை தந்தபோது இந்து மத குரு ஒருவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சமய ஆராதனை நிகழ்வில் 3 லட்சம் பேர் திரண்டனர்

யாழ்ப்பாணம், ஜன. 22

காலி முகத்திடலில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளின் மத்தியில் நேற்று நடைபெற்ற பாப்பரசரின் சமய ஆராதனை வைபவத்தில் மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

ஜோசப் வாஸ் அடிகளுக்கு முத்திப்பேறு அளிக்கும் திருப்பலி பூசையின் பின் பாப்பரசர் ஆசியுரை வழங்கினார்.

ஆசியுரையின் முடிவில் ''அனைவருக்கும் சமாதானம் கிட்டட்டும்'' என தமிழிலும், சிங்களத்திலும் பாப்பரசர் ஆசி கூறியபோது திரண்டிருந்த மக்கள் கரகோஷம் செய்து ஆர்ப்பரித்தனர். (ஐ-6)

## காலி முகத் திடலில் நேற்று இதமான கால நிலை!

கொழும்பு, ஜன. 22

புனித பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் ஜோஸப்வாஸ் அடிகளை திருநிலைப்படுத்திய ஆராதனை நிகழ்ச்சி நடைபெற்றவேளை காலிமுகத்திடல் பகுதியில் நேற்று வழமைக்கு மாறான இதமான காலநிலை நிலவியதாக தெரிவிக்கப்பட்டது.

கொழும்பின் பல பகுதிகளிலும் அச்சமயம் மழை பெய்து கொண்டிருந்த போதும் காலிமுகத்திடல் பகுதியில் மழை பெய்யவில்லை. (ஐ 6)

## ஜோசப் வாஸ் அடிகள் திருநிலைப்படுத்தப்பட்டார்!

காலிமுகத்திடலில் லட்சக்கணக்கில் திரண்டிருந்த கத்தோலிக்க மக்கள் மத்தியில் வணக்கத்துக்குரிய ஜோசப் வாஸ் அடிகளுக்கு பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் நேற்றுக் காலை முத்திப்பேறு அளித்தார்.

ஜோசப் வாஸ் அடிகளை திருநிலைப்படுத்தும் திருப்பலி பூசையை பாப்பரசர் ஒப்புக்கொடுத்தார்.

கத்தோலிக்க மேற்றிராணியார்களும், ஆயர்களும் மற்றும் மத பிரமுகர்களும் அந்த ஆராதனையில் கலந்து கொண்டனர். (ஐ)

## அடுத்த கட்டப் பேச்சு இவ்வாரம் நடக்கும்?

### சிரேஷ்ட அதிகாரி தகவல்

கொழும்பு, ஜன. 22

அரச தரப்பு பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மற்றொரு சுற்றுப் பேச்சு இவ்வாரம் நடைபெறும் என்று பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்— என்று பி. பி. ஸி. சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை— பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயம் முடிந்த பின்னரே விடுதலைப் புலிகளுக்கும் அரச தரப்பினருக்கும் இடையேயான அடுத்த கட்டப் பேச்சுக்கள் குறித்து திகதி நிர்ணயிக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்கா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (ஐ-க-6)

உயர் சிவில் அதிகாரிகள் நியமனம்:

## பதவியிலிருந்து விலக எந்நேரமும் நான் தயார்!

### ஹமில்டன் வனசிங்கா கூறுகிறார்

கொழும்பு. ஜன. 22

பாதுகாப்பு அமைச்சு செயலாளராக இம்மாத இறுதிக்குள் உயர் சிவில் அதிகாரி ஒருவரை நியமிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பணியாற்றும் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் இடத்துக்கே சிவில் அதிகாரி நியமிக்கப்பட இருக்கிறார்.

''எந்த நேரமும் நான் அந்தப் பதவியில் இருந்து செல்லத் தயாராக இருக்கிறேன்'' என்று ஜெனரல் ஹமில்டன் வனசிங்க ''த ஐலண்ட்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவிக்கின்றார். [ஒ-3]

## இனப்பிரச்சினை ஒரு பாரிய அச்சுறுத்தல்

### பாப்பரசர் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 22

இலங்கையின் சமூகங்களுக்கு இனப்பிரச்சினை ஒரு பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் பரிசுத்த பாப்பரசர் மேற்கண்டவாறு கூறினார்.

கிறிஸ்தவர்கள் அல்லாத ஏனைய மதத்தவர்கள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் பாப்பரசர் மேலும் உரை நிகழ்த்துகையில், பௌத்தம், இந்து, இஸ்லாம் ஆகிய அனைத்து மதங்களினதும் சிறப்பு அம்சங்களை கத்தோலிக்க திருச்சபை மதிக்கும் என்றார்.

இலங்கையில் பல்வேறு மதங்களின் மரபுகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்த [illegible] இந்த ஒன்றுபட்ட [illegible] சாரம் இனப்பிரச்சினை தொடர்பான வன்செயல்களை ஒரு முடிவுக்கு கொண்டு வர மக்களைத் தூண்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். [இ-க]

## மா, பாண் பாவனை நாட்டில் அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 22

நாடு முழுவதும் மாவின் பாவனை அதிகரித்துள்ளதாக உணவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் மாவின் விலையைக் குறைத்ததைத் தொடர்ந்து மா, பாண் போன்றவையின் பாவனை இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

சாதாரணமாக பிரதிமாதம் தோறும் 33 ஆயிரம் தொடக்கம் 45 ஆயிரம் மெற்றிக் தொன் மா நாடு முழுவதும் பாவனைப்படுத்தப்பட்டு வந்ததாக கடந்தகால புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் கடந்த நவம்பர் மாதம் மட்டும் 73 ஆயிரம் மெற்றிக் தொன் மா மக்களால் பாவனைக்குட்படுத்தப்பட்டதாக உணவுத் திணைக்கள புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (ஐ-173)

## கடிதங்களை அரசு இவ்வாரம் வெளியிடும்

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பரிமாறப்பட்ட கடிதங்கள், தகவல்கள் என்பன ஓரிரு நாள்களில் பகிரங்கப்படுத்தப்படும் என்று உத்தியோகபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## மழையின் மத்தியில் வடபகுதி யாத்திரிகர்

கொழும்பு, ஜன. 22

வடபகுதி எங்கும் கடந்த புதன்கிழமை கடும் மழை பெய்துகொண்டிருந்தபோதும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மடு போன்ற பிரதேசங்களில் இருந்து சுமார் 8,600 யாத்திரிகர்கள் பாப்பரசரைத் தரிசிப்பதற்காக வவுனியா மார்க்கமாக கொழும்பு வந்தடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் பயணம் செய்வதற்காக விடுதலைப் புலிகள் 60 வாகனங்களைப் பயன்படுத்தி இருந்தனர் என்றும்—

காலை 5.00 மணி முதல் கிளாலியில் 200க்கு மேற்பட்ட படகுகள் சேவையில் ஈடுபட்டு வந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

நொச்சிமோட்டை வரையிலான போக்குவரத்துச் செலவாக யாத்திரிகர்களிடமிருந்து எரிபொருள் செலவு மட்டுமே பெறப்பட்டது என்றும் கூறப்பட்டது. (இ-க)

# அவசர புனரமைப்பு திட்டம் தயாரிக்க குழு யாழ் வந்தது

கொழும்பு, ஜன. 22

வடபகுதியின் அவசர புனர்வாழ்வுத் திட்டத்துக்குத் தேவையான பூர்வாங்க செயற்திட்டத்தை தயாரிப்பதற்காகவும் இங்குள்ள நிலைமைகளை ஆராய்வதற்கும் கலாநிதி ஏ. எஸ். குணசிங்கம் [illegible] நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

சமூக சேவையாளர் அஜித் ரூபசிங்கா, பொறியியலாளர் திரு ராஜேந்திரன், கடல்சார்துறை நிபுணர் திரு ரூபமூர்த்தி ஆகியோர் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

கிளாலி ஊடாக நேற்று யாழ்ப்பாணம் வந்த இவர்கள் [illegible] மறுதினம் செவ்வாய்க்கிழமை வரை இங்கு தங்கியிருப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ் வந்துள்ள மேற்படி குழுவினர் நேற்றுப் பிற்பகல் யாழ். செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

செயலக உயர் அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சபைத் தலைவர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வடபகுதியை அவசரமாகப் புனரமைப்பதற்கான 4 ஆயிரத்து 700 கோடி ரூபா பெறுமதியான உத்தேச திட்டம் ஒன்று செயலக அதிகாரிகளால் கூட்டத்தில் வைத்து குழுவினரிடம் கையளிக்கப்பட்டது.

வடபகுதியை புனரமைக்கும் உத்தேசத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான நிதியில் முக்கால் பங்கை

(5ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேஷிய ஆதிக்கத்துக்கு எதிராக போராடி வரும் கிழக்கு ரிமோர் மக்கள்

கடந்த ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் இந்தோனேஷியாவின் தலைநகரான ஜாகார்த்தா [Jakarta] வந்தபோது ஜாகார்த்தாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் ஒரு சம்பவம் இடம் பெற்றது.

அச் சம்பவம் உலக நாடுகளின் கவனத்தை கிழக்கு ரிமோர் நோக்கித் திருப்பி விட்டிருந்தது.

ஜனாதிபதி பில் கிளின்ரன் இந்தோனேஷியா வந்தபோது ஜாகார்த்தாவில் உள்ள அமெரிக்கத் தூதரக வளவுக்குள் 29 கிழக்கு ரிமோர் பிரிவினைவாதிகள் அத்துமீறிப் பிரவேசித்தனர்.

இந்தோனேஷிய அரச படைகளினால் கைது செய்யப்பட்ட தமது தலைவர் ஒருவரை விடுதலை செய்யக் கோரி அவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

கிழக்கு ரிமோர் [East Timor] மக்களின் போராட்டம் உலக செய்தி தொடர்பு சாதனங்களில் இடம் பிடிக்க இந்த உண்ணாவிரதப் போராட்டம் காரணமாக அமைந்தது. பிரிவினைவாதிகளின் நோக்கமும் அதுதான்.

**உலகின் கவனத்தை குறைவாக ஈர்த்த கிழக்கு ரிமோர்**

உலகில் போராட்டம் நடத்தும் மக்களில் உலகின் கவனத்தைக் குறைவாக ஈர்த்த மக்கள் கிழக்கு ரிமோர் மக்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

உலக மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்ட ஒரு பகுதியாக கிழக்கு ரிமோர் இன்னும் கருதப்பட்டு வருகிறது.

ஜாகார்த்தா அமெரிக்கத் தூதரகத்தில் இடம் பெற்ற சம்பவத்தின் பின்னர் கிழக்கு ரிமோர் மக்களின் பிரச்சினையில் அமெரிக்கா அக்கறை காட்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இதுவரை உருப்படியான— பயன் தரக்கூடிய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. தமது இந்தோனேஷிய விஜயத்தின் போது கிழக்கு ரிமோர் மக்களுக்கு சுயாட்சி வழங்கும்படி அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் கோரினார். ஆனால் இந்தோனேஷிய அதிபர் சுஹார்ட்டோ

**உலக நாடுகளின் கவனத்தை குறைவாக ஈர்த்த கிழக்குரிமோர் மக்களின் பரிதாப நிலை**

இதனை அடியோடு நிராகரித்து விட்டார்.

**2 லட்சம் மக்கள் இதுவரை பலி**

இந்தோனேஷியாவின் ஆட்சிக்கு எதிராக கடந்த 19 வருட காலமாக கிழக்கு ரிமோர் மக்கள் சுதந்திரப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இப்போராட்டத்தில் இதுவரை 2 லட்சம் மக்கள் வரை கொல்லப்பட்டு விட்டனர்.

**பங்கு போடப்பட்ட ரிமோர்**

ஆஸ்திரேலியாவில் இருந்து 100 மைல்கள் வடக்கே இந்தோனேஷியத் தீவுகளின் எல்லையில் கிழக்கு ரிமோர் அமைந்துள்ளது.

ரிமோர் சுமார் 400 ஆண்டு காலம் போர்த்துக்கல் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. போர்த்துக்கலிடமிருந்து ரிமோரைக் கைப்பற்றுவதற்கு ஹோலந்து சண்டையிட்டது.

இதன் காரணமாக 1913 ஆம் ஆண்டில் போர்த்துக்கலும் ஹோலந்தும் ரிமோரைப் பங்கு போட்டன.

மேற்கு ரிமோர் ஹோலந்தின் ஆட்சியின் கீழ் வந்தது. கிழக்குரிமோர் போர்த்துக்கல் ஆட்சியின் கீழ் வந்தது.

மேற்கு ரிமோர், ஹோலந்திடமிருந்து சுதந்திரம் பெற்று இந்தோனேஷியாவின் ஒரு மாநிலமாக இணைந்து கொண்டது.

இதன் பின்னர் போர்த்துக்கல் 1974இல் கிழக்கு ரிமோருக்கு சுதந்திரம் வழங்கியது, கிழக்கு ரிமோர் தன்னை சுயாதீனமான ஒரு தனிநாடாக மாற்ற முயன்றபோது 1975 இல் கிழக்கு ரிமோரை இந்தோனிஷியா ஆக்கிரமித்துக் கொண்டது.

இந்தோனேஷியாவின் ஆதிக்கத்திற்கு எதிராக கிழக்கு ரிமோர் மக்கள் 1975 இல் ஆரம்பித்த சுதந்திரப் போராட்டமே இன்றுவரை தொடர்ந்து நடைபெறுகிறது.

இந்தோனேஷியாவின் 14 இராணுவப் பிரிவுகள் தற்போது கிழக்கு ரிமோர் நகரில் நிறுத்தப்பட்டுள்ளன.

**திலி நகர படுகொலை**

இந்த 19 வருட போராட்டத்தில் 1991 இல் டிலி (Dili) நகரில் நடைபெற்ற படுகொலைகள் கிழக்கு ரிமோர் சுதந்திரப் போராட்டத்தில் கறை படிந்த அத்தியாயங்களாகி விட்டன.

இந்தோனேஷியப் படைகளின் மிலேச்சத்தனமான தாக்குதலில் கொல்லப்பட்ட செபஸ்தியோ கோமஸ் என்பவரின் மறைவை நினைவு கூருமுகமாக நடத்தப்பட்ட ஆராதனையில் பங்குபற்றிய பின்னர், புனித ஸ்ருஸ் மயானத்தை நோக்கி சென்ற மக்கள் மீது இந்தோனேஷியப் படைகள் நடத்திய மிகவும் மோசமான தாக்குதலில் நூற்றுக்கணக்கான கிழக்கு ரிமோர் மக்கள் கொல்லப்பட்டனர்.

இதுவரை நடந்த போராட்டத்தில் கிழக்கு ரிமோர் மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் மரணித்து விட்டனர். ஆனால் இந்தோனேஷிய அரசு விட்டுக் கொடுக்கும் நிலையில் இல்லை.

**பிறெரிலின் இயக்கம்**

இந்தோனேஷியாவின் ஆதிக்கத்துக்கு எதிராக கிழக்கு ரிமோரில் பிறெரிலின் [Fretilin] இயக்கம் போராட்டம் நடத்தி வருகிறது.

இந்த இயக்கத்தின் தலைவர் யனானா கஸ்மாவோ [Yanana Gusmao] இவர் கைதாகி இந்தோனேஷியாவில் 17 வருடகாலச் சிறை அனுபவித்து வருகிறார்.

இவரை விடுதலைசெய்யக் கோரியே கிழக்கு ரிமோர் பிரிவினைவாதிகள் பில் கிளின்ரனின் ஜாகார்த்தா விஜயத்தின்போது அமெரிக்கத் தூதரகத்துக்குள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி இருந்தனர்.

## இதுவரை 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பலி

உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய 29 பேரையும் இந்தோனேஷியப் பொலீஸாரிடம் ஒப்படைப்பதில்லை என்றும்—

அவர்களுக்கு போர்த்துக்கலில் அரசியல் தஞ்சம் வழங்குவது என்றும் — இணக்கம் காணப்பட்டதை அடுத்து தூதரகப் போராட்ட பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டது. 29 பேரும் பின்னர் போர்த்துக்கலுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கிழக்கு ரிமோரின் தலைநகரம் டிலி பெரும்பான்மை மக்கள் கத்தோலிக்கர்கள்.

இவர்களது கலாசாரம், வரலாறு முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட இந்தோனேஷிய மக்களிடமிருந்து வேறுபட்டது. இதனால் தான் இந்தோனேஷியாவுடன் இணைய இவர்கள் மறுக்கிறார்கள்.

சமீபத்தில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் ஐ.நா. அதிகாரிகள், போர்த்துக்கலைச் சேர்ந்த குழுக்கள்

**இந்தோனேஷியாவின் சுஹார்ட்டோ அரசு விட்டுக் கொடுக்கும் நிலையில் இல்லை**

கிழக்கு ரிமோர் செல்ல இந்தோனேஷிய அரசு அனுமதி வழங்கியது.

மற்றும் இந்தோனேஷிய அரசாங்கம், தனது ஏனைய மாகாணங்களில் இல்லாதவாறு பெரும் அக்கறை எடுத்து கிழக்கு ரிமோரில் பாடசாலைகள், வீதிகள், மின்சார இணைப்புகள், ஆஸ்பத்திரிகளை நிறுவி பெரும் அபிவிருத்தித் திட்டங்களைச்செயற்படுத்த முயன்று வருகிறது.

ஆனால் கிழக்கு ரிமோர் மக்கள் இவற்றினால்

**வெளி உலகில்**

அசைந்து கொடுத்ததாக இல்லை. தனிநாட்டுப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**13, 667 தீவுகள்**

பல்வேறு மத, கலாசாரங்களைக் கொண்ட 13, 667 தீவுகளை ஒருங்கிணைத்து ஆட்சி செய்து வரும் இந்தோனேஷிய அரசுக்கு கிழக்கு ரிமோர் பெரிய பிரச்சினையாகத் தோற்றவில்லை போலும். இந்தோனேஷியத் தீவுகளில் 300 இன மக்கள் வாழ்கின்றனர்.

**இந்தோனேஷிய வரலாறு**

இந்தோனேஷியா 1945ஆம் ஆண்டு ஹோலந்திடம் இருந்து சுதந்திரம் பெற்றது. அதன் மக்கள் தொகை 19 கோடி.

சுதந்திரம் அடைந்த பின்னர் இந்தோனேஷியாவின் முதலாவது தலைவராக சுஹார்னோ (Sukarno) பதவி ஏற்றார்.

இந்தியாவுக்கு ஜவர்ஹால் நேரு போன்றும் பாகிஸ்தானுக்கு ஜின்னா போன்றும் சுதந்திர இந்தோனேஷியாவின் சிற்பியாக சுஹார்னோ கருதப்படுகிறார்.

1965ஆம் ஆண்டில் இந்தோனேஷியாவில் சுஹார்னோவின் ஆட்சியைக் கவிழ்க்க கம்யூனிஸ்ட்டுகள் சதி செய்தனர்.

கம்யூனிஸ்ட்டுகளை வீழ்த்த ராணுவத்தில் உள்ள வலதுசாரிகள் எதிர்ப்புரட்சி நடத்தினர்.

இவை காரணமாக 1966 ஆம் ஆண்டில் சுஹார்னோ பதவி இழந்தார்.

பதவி இழந்து நான்கு வருடங்களின் பின் மரணமாகும் வரை அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

மக்கள் மத்தியில் அவ்வளவாகப் பிரபல்யம் பெற்றிருக்காத வலதுசாரி ஆதரவு சுஹார்ட்டோ 1967 இல் பதவி ஏற்றார்.

**ஒரு லட்சம் கம்யூனிஸ்ட்டுக்கள் கொலை**

அவர் பதவி ஏற்றவுடன் மேற்கொண்ட கம்யூனிஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கையில் சுமார் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட கம்யூனிஸ்ட்டுக்கள் இந்தோனேஷியாவில் கொல்லப்பட்டனர்.

73 வயது நிரம்பிய சுஹார்ட்டோவின் பதவிக் காலம் 1998 ஆம் ஆண்டுடன் முடிவடைகிறது.

தமது பதவிக்காலத்துக்குள் அவர் கிழக்கு ரிமோர் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பாரா என்பதே இன்றைய முக்கிய கேள்வியாக இருந்து வருகிறது.

**தீர்வு கிட்டுமா?**

கிழக்கு ரிமோர் மக்களின் தாய் மொழி ''ரெற்றம்'' அரச கரும மொழி போர்த்துக்கீச மொழி. ஆனால் இந்தோனேஷிய அரசு தனது மொழியான பஹாஸா மொழியை திணித்து வருகிறது.

கிழக்கு ரிமோரில் சுகாதார நிலை மிகவும் மோசம் அடைந்துள்ளது. மக்கள் மத்தியில் சயரோகமும் நியூமோனியாவும் பெரும் அளவில் காணப்படுகின்றன.

1977ஆம் ஆண்டிலிருந்து பெரும் பாலான மக்கள் வீடுகளை இழந்து அகதிகளாக முகாம்களிலேயே வாழ்கின்றனர்.

**-சஞ்சாரன் -**

குழந்தை மரணம் 1000 பேருக்கு 160 ஆக இருந்து வருகிறது.

5வயதுக்கு குறைந்த குழந்தைகளில் 75 சதவீதமானவை போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய புதிய உலக ஒழுங்குக்கு அமைய (New World Order) கிழக்கு ரிமோர் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும்பொறுப்பு ஐ.நா மீதும் அமெரிக்கா மீதுமே சுமத்தப்பட்டுள்ளன.

ஆனால் ஜனாதிபதி சுஹார்ட்டோ எவ்வளவு தூரம் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறார் என்பதிலேயே தீர்வு தங்கி இருக்கிறது. ★

**சூரிய காந்தி**

உதயன் ஞாயிறு சிறப்பிதழ்


## கைலை ஆதீனம்
## ஆரம்ப அறிமுக விழா

நாள்: பவ வருடம் தைத் திங்கள் 8ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணி 45 நிமி. (22 — 01 — 1995)

இடம்: ஆறுமுகநாவலர் ஆச்சிரம மண்டபம், சைவ பரிபாலன சபை, நீராவியடி, யாழ்ப்பாணம்.

தலைவர்:
பேராசிரியர் கலாநிதி சி.க. சிற்றம்பலம்
(தலைவர், வரலாற்றுத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

**நிகழ்வுகள்**

2-45 மணி — மங்கள விளக்கேற்றல்
கனகசபை தர்மகுலசிங்கம் (சிவ. தொண்டன்)
நத்துவப் பாடல்கள்
கரவை. மு கடம்பநாதன் எம். ஏ.

3-00 மணி — வரவேற்புரை - வாழ்த்துரை
காரை. எம். பி. அருளானந்தன் ஆசிரியர் (யா / கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்)
முன்னுரை
தவத்திரு சிவபாதசுந்தரனார் சுவாமிகள் (கைலை ஆதீன முதல்வர்)

3-30 மணி — தலைமையுரை

4-00 மணி — ஆசியுரை
தவத்திரு சோமாஸ்கந்தவேள் சுவாமிகள் (பீடாதிபதி சிவகுருநாத பீடம், கந்தர்மடம்)

★ பிரதம விருந்தினர் உரை
பேராசிரியர் கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை (கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

★ கௌரவ விருந்தினர் உரை
திரு. டொமினிக் (தமிழீழ நிர்வாகசபை பொறுப்பாளர்)

★ சிறப்பு விருந்தினர்
கலாநிதி ப கோபாலகிருஷ்ணன் (தலைவர், இந்து நாகரீகத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

திருமதி நாச்சியார் செல்வநாயகம் எம். ஏ (முதுநிலை விரிவுரையாளர் இந்து நாகரீகத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

கவிஞர் சோ. பத்மநாதன் பீ. ஏ. (உப அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

க. தியாகராசா, அமைப்பாளர். — நா. தர்மையா, அழைப்பாளர்.

[சி-311]


## நோயாளரை கப்பலில் அனுப்புவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம். ஜன 22

பருத்தித்துறையில் இருந்து நரோமா'' கப்பல் மூலம், நோயாளிகளை கொழும்புக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் — வைத்திய நிபுணர்களால், சிபார்சு செய்யப்பட்ட நோயாளிகள் மட்டும் தங்கள் அடையாள அட்டை மற்றும் ஆவணங்களுடன் நாளை மறுதினம் திங்களன்று காலை 9 மணிக்கு தமது பணிமனைக்கு வந்து பதிவுசெய்து கொள்ளுமாறும் யாழ் ஆஸ்பத்திரி பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் 14ஆம் திகதி பருத்தித்துறைக்குச் சென்று கப்பல் சேவை ரத்துச் செய்யப்பட்டதால் திரும்பிய நோயாளர்களையும் பதிவு செய்ய வருமாறு அவர் கேட்டுள்ளார்.

### சிறுவர் பூங்கா ஆண்டு விழா

யாழ். பொம்மை வெளியில் அமைந்துள்ள சிறுவர் போசாக்கு பூங்கா 2 ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிறு மாலை 3.00 மணிக்கு நடைபெறுகிறது.


## 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 21 — 02 — 1937

இறப்பு: 23 — 12 — 1994

வேலணை வடக்கு
அமரர்
**கந்தையா கோபாலபிள்ளை** B. Sc.
(ஓய்வு பெற்ற சிரேஷ்ட வரிமதிப்பீட்டாளர்)

கருணையின் நெஞ்சைக் கனல்எரி கொளவோ!
காலனே! நின்றன் செயல் எமதன்புப்
பெருமையி னாரைம் பிரித்ததும் விதியோ!
பெட்புயர் கோபால பிள்ளைத்
தருமனே சிவனார் உலகினை விரும்பிச்
சார்ந்ததென் உனதுயர் அன்புக்
குரியவர் செய்த தோர்கிலா துள்ளம்
உருகினும் பெறுதிசா யுட்சம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

12. மணற்றறை வீதி,
யாழ்ப்பாணம். (31204)



உ
சிவமயம்

## ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
ஏழாலை

# தேர் உற்சவமும் புதியரத அங்குரார்ப்பண வைபவமும்



(22-01-95) அதாவது இன்று மேற்படி ஆலயத்தின் இரதோற்சவம் காலை 10 மணிக்கு நடைபெறும்.

மகோற்சவ குரு:
சிவஸ்ரீ தி. கெங்காதரக்குருக்கள் (சிவாகமரத்தினா) [புன்னாலைக்கட்டுவன்

11-00 மணிக்கு புதிதாக செய்யப்படவுள்ள நவீனமும் ஆகமங்களுக்கும் அமையக்கூடியதான அதிவிசேஷ சிற்பவேலைகளுக்கும் அமையவும் நவகோணமும் அமைந்த தேரின் அங்குரார்ப்பண வைபவம்

ஆரம்பித்து வைப்பவர்:
சிற்ப கலாநிதி ஆறுமுகம் சிவரத்தினம் அவர்கள் (திருநெல்வேலி)

12–00 மணிக்கு சொற்பொழிவு

சிவத்திரு. வ. குமாரசாமி ஐயர் (சிவானந்த வாரிதி)
திரு. த. சிவகுமாரன் (ஆசிரியர், கம்பன் கழகம் காரைநகர் - தமிழருவி)
திரு. ஆனந்தராசா (ஆசிரியர்)

1–00 மணிக்கு அன்னதான வைபவம் நடைபெறும்.

**23 · 01 · 95** திங்கட்கிழமை 11-00 தீர்த்த உற்சவம்
**24 - 01 - 95** செவ்வாய்க்கிழமை மாலை 3-00 பூங்காவனம்

சுபம் சுபம் சுபமஸ்து

இங்ஙனம்
தேவஸ்தானம்

(சி-415)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் இரத்த அழுத்த வியாதி; ஆபத்துக்களும் ஆலோசனைகளும்

உயர் இரத்த அழுத்த நோய் உலகின் சகல நாட்டு மக்களையும் இப்போது பாதிக்கும் நோயாக மாறியுள்ளது. இந்த நோய் காரணமாக முன்னர் மரணங்கள் அதிகரித்து வந்தன. ஆனால் இப்பொழுது அந்த வகையான மரணங்கள் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று கூறலாம். விஞ்ஞான வளர்ச்சியும் புதிய வகை மருந்துகள் கண்டுபிடிப்புமே இதற்குக் காரணங்களாகும்.

அதுமட்டுமல்ல மக்கள் அந்நோய் குறித்து பல விளங்கங்களை பெற்றிருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும்.

முன்னர் ''பணக்காரர் நோய்'' என வர்ணிக்கப்பட்ட இந்த உயர் இரத்த அழுத்த நோய் இப்பொழுது பேதம் ஏதுமின்றி எல்லா வர்க்க மக்களிலும் காணப்படுகிறது.

உணவுக் கட்டுப்பாட்டு முறைகள் மூலம் இந்நோயின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

### ஆபத்துக்கள்

★ மாரடைப்பு

★ இருதயத்தின் தொழிற்பாடு பாதிப்படைதல்.

★ மூளைக்குள் இரத்தப் பெருக்கு ஏற்படுதல்.

★ இதனால் திடீர் மரணம், பாரிசவாதம் ஏற்படுதல்.

★ இருதயத்திலிருந்து பெறப்படும் பாரிய இரத்தக் குழாய்களில் வெடிப்பு ஏற்படுதல்.

★ சிறுநீரகங்களின் தொழிற்பாடு குறைதல் ஏன் ஏற்படுகின்றது? இதற்குரிய காரணங்களை அடிப்படையில் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

### அ. முதலாம்தர காரணங்கள் (PRIMARY OR ESSENTIAL)

★ இது ஏன் ஏற்படுகின்றது என இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

★ 90% சத வீதமான உயர் இரத்த வியாதிக்கு இதுதான் காரணம்.

★ பரம்பரை – தாய் தகப்பனுக்கு உயர் இரத்த அழுத்த வியாதி இருக்குமாயின் அவர்களின் பிள்ளைகளுக்கு உயர் இரத்த அழுத்த வியாதி ஏற்படும் ஆபத்து அதிகரித்துக் காணப்படுகிறது.

★ உடல் பருமன் (Obesity) தமது வயதிற்கும் உயரத்திற்கும் இருக்க வேண்டிய உடல் நிறையைவிட மிக அதிகமாக மேலதிகமாக இருப்பதுவும் ஒரு காரணமாகும்.

★ சாராயம் (Alcohol) மதுபானத்தை தொடர்ச்சியாகவும் அடிக்கடியும் குடிப்பதனால் உயர் இரத்த அழுத்த வியாதி ஏற்படும்.

★ மேலதிகமாக உப்பு உண்ணுதல் (Salt Intake) உப்பை அதிகளவில் அல்லது மேலதிகமாக உப்பை கறியுடன் அல்லது வெறுமையாக உண்ணுதல்.

★ ஹோர்மோன்களினால் ஏற்படும் பிரச்சினை (Hormone Factors) சுரப்பிகளில் பிறப்புக் குறைபாடுகள் கட்டிகள் வளருதல் போன்றவற்றால் மேலதிக கோர்மோன்கள் சுரக்கப்படும்.

### ஆ. இரண்டாம் தரக் காரணங்கள் (SECONDARY)

★ 35 வயதிற்குட்பட்டவர்களுக்கு உயர் இரத்த அழுத்த வியாதி ஏற்பட்டால் இந்தக் காரணங்களில் ஏதாவதொன்று காரணமாக இருக்கலாம்.

#### 1. சிறுநீரகத்தில் எற்படும் பிரச்சினைகள்

★ இரண்டாம் தரக் காரணங்களினால் உயர் இரத்த அழுத்த வியாதி ஏற்படுவதற்கு சிறுநீரகங்களில் ஏற்படுகின்ற பிரச்சினையே 80% சதவீதமான காரணமாக இருக்கலாம்.

★ சிறுநீரகங்களிலுள்ள பிறப்புக் குறைபாடுகள்

★ சிறுநீர்க் கால்வாயில் கிருமி படிந்து சிறுநீரகங்களைத் தாக்குதல்

★ சிறுநீரகத் தொகுதியில் கற்கள் உருவாகுதல் (Kidney Stones)

★ கைகள் கால்களில் உள்ள தோலில் அவிச்சல்கள், புண்கள் ஏற்படுவதனால் சிறுநீரகங்களில் பாதிப்புக்கள் ஏற்படுதல்.

#### 2 சுரப்பிகளில் ஏற்படும் பிரச்சினைகள்

எமது உடலின் உயிரோட்டமான வாழ்க்கைக்கு உடலிலுள்ள பல சுரப்பிகளின் சீரான தொழிற்பாடும் அவற்றின் சுரப்புக்களும் அத்தியாவசியம். இவற்றில் ஏதேனும் பிறப்புக் குறைபாடுகள் அல்லது இடையினில் கட்டிகள் வளருவதனால் இந்தச்சுரப்பிகள் அளவுக்கதிகமாக கோர்மோன்களைச் சுரந்து விடும். இதனால் உயர் இரத்த அழுத்த வியாதி ஏற்படும் ஆபத்து இருக்கின்றது.

#### 3. இரத்தக்குழாயில் ஏற்படும் சுருக்கங்கள்

★ சிறுநீரகத்திற்கு இரத்தம் வழங்கும் குழாயில் (Renal artery stenosis) சுருக்கம் ஏற்படுதல்.

★ இதயத்திலிருந்து உடலுக்கு விநியோகம் செய்யும் பாரிய இரத்தக்குழாயில் சுருக்கம் (Coarctation of Aorta)

இவை பிறப்பிலிருந்து ஏற்படும்.

#### 4. பெண்களின் கர்ப்பம்

பெண்கள் கர்ப்பம் தரித்திருக்கின்றபோது குறிப்பாக முதல் மூன்று மாதங்களில் உயர் இரத்த அழுத்த வியாதி ஏற்படுவதற்கு முன்பு குறிப்பிட்டுள்ள முதற்தர காரணிகள் காரணமாகும்.

கர்ப்பமாக இருக்கின்றபோது எப்போதாவது உயர் இரத்த அழுத்தம் ஏற்படுமாயின் குழந்தை பிறக்குமட்டும் இதுபற்றி அவதானமாக இருக்க வேண்டும். மேலும் ஏற்கனவே நீரிழிவு வியாதி உள்ளவர்கள், குடும்பத்தில் உயர் இரத்த அழுத்த வியாதி உள்ளவர்கள் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

## வைத்தியம்

ஏனெனில் கர்ப்பக்காலத்தின்போது உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்காவிட்டால் தாய்க்கு வலிப்பு ஏற்பட்டு சிசு மரணம், தாய்மரணம் என்பன ஏற்படலாம்.

#### 5. சில மருந்துகள்

சில மருந்து வகைகளும் உடலில் உயர் இரத்த அழுத்தத்தைத் தோற்றுவிக்கும். உதாரணமாக கருத்தடை மாத்திரைகள், மற்றும் பிரிட்னிசிலோன், ஸ்ற்றீரிபேயிட்ஸ், காத்பெனக்ஸலோன், லிக்குயோரைஸ், வாயோபிரஸ்ஸின் போன்ற மருந்துகள்.

### அறிகுறிகள்

சாதாரண தலையிடியிலிருந்துகடுமையான தலையிடி, மூக்கினால் இரத்தம் கசிதல், சிறுநீர்த் தொகுதியில் கிருமிகள் படிந்திருத்தல், கற்கள் இருந்திருத்தல், போன்ற மருத்துவ சரித்திரம், குடும்ப அங்கத்தினருக்கு இந்தவியாதி இருந்திருத்தல், கடுமையாக வியர்த்தல், நெஞ்சில் வலி எடுத்தல் நெஞ்சு படபடத்தல், வலிப்பு ஏற்படுதல், தலைச்சுற்று மார்பு வலி, திடீரென பார்வையிழப்பு, மயக்கம் என்பன ஏற்படும்.

அலட்சியம் செய்யாது உடனடியாக அருகிலுள்ள மருத்துவரிடம் காட்டி உடலின் இரத்த அழுத்தம், உடலின் நிறை மற்றும் சிறுநீர், இரத்தம், இருதயம் என்பவற்றைப் பரிசோதித்துக்கொள்ள வேண்டும்.

### சில ஆலோசனைகள்

★ மனிதனுடைய அன்றாட பழக்கவழக்கத்திலும் வாழ்க்கை முறையிலும் ஏற்படுத்திக் கொள்கின்ற சில மாற்றங்கள் உயர் அழுத்தத்தைக் குறைக்குமென ஆய்வுகள் கூறுகின்றன.

★ அளவுக்கதிகமாக உடல் நிறையைக் குறைப்பதன் மூலம் உயர் இரத்த அழுத்தம் கணிசமான அளவு, குறையும். எனவே அளவுக்கதிகமாகவும், அடிக்கடியும் உண்ணுதல் குறிப்பாக கொழுப்புச் சத்து சீனிச்சத்து என்பவற்றை 40 வயதிற்கு மேல் உண்ணுதலைத் தவிர்த்தல். சீரான உடற்பயிற்சி செய்தல், என்பவற்றால் உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கலாம்.

★ அடிக்கடியும் அதிகளவிலும் மதுபானம் அருந்துபவர்கள் அதனை அடியோடு மறப்பது நன்று.

★ சிகரெட், பீடி, சுருட்டு புகைப்பவர்களும் படிப்படியாகக் குறைத்து முற்றாக நிறுத்துவது நல்லது.

★ ஒழுங்கான சீரானஉடற்பயிற்சி மிகவும் அவசியம், சைக்கிள் ஓடுதல், நடத்தல். ஏதேனும் விளையாட்டில் ஈடுபடல், தோட்டம் செய்தல், கிணற்றில் நீர் அள்ளுதல் போன்றவற்றை நாள்தோறும் செய்தல் வேண்டும்.

வைத்தியகலாநிதி
**பி. ரமணீகரன்**

★ 40 வயதின் பின்னர் 3 — 6 மாதங்களுக்கு ஒருமுறை இரத்த அழுத்தம் இரத்தத்திலுள்ள சீனிச்சத்து கொழுப்புச்சத்து, கொலஸ்திரோல் சத்து, சிறுநீர், உடல் நிறை என்பவற்றை பரிசோதித்துக் கொள்வதோடு குறிப்பெடுத்துக் கொள்வதும் நல்லது.

★ குறிப்பாக குடும்பத்தில் தாய், தகப்பன் சகோதரத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தொழிற்சாலை, உணவகங்களிலும் பயன் தரும் இரட்டைச் சூட்டடுப்பு

## கடன் அடிப்படையிலும் கட்டலாம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பகுதியினர் இதுவரை வடதமிழீழத்தில் உள்ள மக்களுக்கு 12 ஆயிரத்து 480 இரட்டைச் சூட்டடுப்புக்களை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இதேசமயம், உணவுச் சாலைகளுக்கும் பெரிய அளவிலான இரட்டைச்சூட்டடுப்புக்களைக் கட்டிக் கொடுத்து வருகின்றனர். இதுகால வரை சுமார் 500 பெரிய சூட்டடுப்புக்களை சக்திப் பகுதியினர் நிறுவிக் கொடுத்துள்ளனர்.

வடதமிழீழத்தில் இரட்டைச் சூட்டடுப்பின் தேவைகள் அதிகரிப்பு மற்றும் அத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து த. பொ. மே. நிறுவனம் வெளியிட்டுள்ள குறிப்புக்கள் வருமாறு:—

அன்றாட வாழ்க்கையில் மக்களுக்கு விறகின் விலையேற்றம் பெரும் சுமையாக இருக்கின்றது. ஆரம்ப காலங்களில் அதாவது இரண்டாவது ஈழப்போர் தொடங்கு முன் யாழ். குடாநாட்டு மக்களுக்குத் தேவையான விறகு வன்னிப் பகுதியிலிருந்தே வந்துகொண்டிருந்தது. ஆனால் 1990ஆம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து ஆனையிறவுப் பாதை தடைப்பட்டதன் காரணமாக வன்னிப் பகுதியிலிருந்து வந்த விறகு யாழ். குடாநாட்டுக்கு வருவது தடைப்பட்டது.

அதன் பின் விறகு விற்பனையாளர்கள் யாழ். குடாநாட்டிலுள்ள பயன்தரு மரங்கள் வடமராட்சி கிழக்கு, தென்மராட்சிப் பகுதியில் உள்ள சிறு பற்றைக்காடுகளை வெட்டி விற்பனை செய்யத் தொடங்கினர். இதன் காரணமாக இப்பகுதியில் விறகு விலையேற்றம் கூடிக்கொண்டே சென்றது.

மேலும் இரண்டாவது ஈழப்போர் தொடங்கிய காலத்திலிருந்து வடதமிழீழத்தில் மின்சாரம் தடைப்பட்டதன் பின் சகல தொழிற்சாலைகளும் நிறுவனங்களும் இயங்க முடியாமல் இருந்தது. இதனால் இங்கு வேலையில்லாப் பிரச்சினை தோன்றியது. பல கூலிவேலை செய்யும் தொழிலாளர் அனைவரும் பாதிப்புக்குள்ளானார்கள்.

### இரட்டைச்சூட்டடுப்பு அறிமுகமானது ஏன்?

இப்படியான இந்த நேரத்தில் குறைந்த வருமானத்தில் வாழ்க்கை நடத்தும் இவர்களுக்கு விறகின் விலையேற்றம் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனைக் கருத்திற்கொண்டே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பகுதியினர் இரட்டைச் சூட்டடுப்பு பாவனை முறையை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இரட்டைச் சூட்டடுப்பு பயன்பாட்டால் எம்மக்கள் மிக இலகுவாகவும் எளிதாகவும் நன்மையடைந்து வாழக்கூடியதாக இருக்கின்றது. இந்த அடுப்பின் மூலம் மக்களின் தேவைகள் மிக சிக்கனமாகவே இருக்கின்றது. இந்த அடுப்பினைப் பாவிக்கும் மக்கள் சிக்கனமான முறையில் சமைக்கின்றனர். எரிபொருளும், விறகுகளும் மீதப்படுத்தப்படுகின்றன.

### சிரமங்கள் இன்றி சமைக்கலாம்

இரட்டைச் சூட்டடுப்பில் சமைக்கும் போது அதிக விறகுகள் தேவையில்லை. குறைந்த விறகினைக் கொண்டே சமைக்கக் கூடியதாக இருக்கின்றது. ஒரே நேரத்தில் இரண்டு அடுப்பில் சமைத்துக் கொள்ளலாம். சிரமமின்றி சமைக்கக் கூடியதாக இருக்கின்றது.

சக்திப் பகுதியினர் மிக நுணுக்கமான முறையில் அனுபவமுள்ளவர்களைக் கொண்டு இந்த அடுப்பினை மக்களுக்கு கட்டிக் கொடுக்கின்றனர்.

### கடன் அடிப்படையில் சூட்டடுப்புக்கள்

சக்திப் பிரிவினர் கட்டிக் கொடுக்கும் இந்த இரட்டைச் சூட்டடுப்பை வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் பயன்படுத்த முடியாதிருந்த போது அவர்களுக்கு கடன் அடிப்படையில் இரட்டைச் சூட்டடுப்பைக் கட்டிக் கொடுத்து நன்மையடையவும் செய்கின்றனர்.

இந்த வகையில் தீவகம், வலிகாமம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கி வாழும் மக்கள் இதன் மூலம் பெரிதும் நன்மையடைகின்றனர்.

இதே சமயம் வேலையின்றி இருக்கின்ற மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. இப்படியான நன்மை கிடைக்கூடிய சகல ஊக்குவிப்பு வேலைகளையும் சக்திப் பகுதியினர் செய்து வருகின்றனர்.

சக்திப் பகுதியினர் மக்களுக்கு கட்டிக் கொடுக்குல் அடுப்புகளில் உயர் சமையம் இரட்டைச் சூட்டடுப்பும் ஒன்றாகும். இதனை சிற்றுண்டிச்சாலைகள், விடுதிகள் ஆகியவற்றுக்கு கட்டிக் கொடுக்கின்றனர். பெரும் தொகையான உணவுகளை சமைப்பதற்கு இது பயன்படக்கூடியதாக இருக்கின்றது. இவ்வகையான இரட்டைச் சூட்டடுப்பிலும் இரண்டு அடுப்புகளிலும் ஒரே நேரத்தில் சமைக்கக் கூடியதாக இருக்கிறது. அத்தோடு இதிலும் 50% விறகு மீதப்படுத்தப்படுகின்றது.

### குறைவான வெப்பத்தில் சமைக்க உதவும்

தற்போது இந்தவகை இரட்டை சூட்டடுப்பை யாழ். குடாநாட்டில் பல இடங்களிலும் சக்திப் பகுதியினர் கட்டிக்கொடுத்துள்ளனர். குறைவான வெப்பத்துடன் சமைக்கும் சில பொருள்களுக்கும் இது முக்கியமாக பயன்படக் கூடியதாக இருக்கின்றது.

உதாரணமாக சொக்லட் தொழிற்சாலையில் திரவ பதார்த்தங்களை அடுப்பில் வைத்து எரிக்கும் போது அதற்குக் குறைவான வெப்பமே தேவைப்படுகின்றது. எனவே அப்படியான தொழிற்சாலைகளுக்கு இந்த இரட்டைச் சூட்டடுப்பு அவசியமானதாகும். இந்த இரட்டைச் சூட்டடுப்பில் திரவ பதார்த்தங்களை வைத்து எரிக்கும் போது இது பதமான தன்மையுடன் இறக்கக் கூடியதாக இருக்கின்றது.

அத்துடன் இந்தப் பதார்த்தத்தில் விறகின் மணம் ஏற்படாத வண்ணம் புகைபிடிக்காத முறையில் சமைக்கக் கூடியதாக இருக்கின்றது. இதே ரீதியில் தான் சிற்றுண்டிச் சாலைகளிலும் உயர் சமையல் இரட்டைச் சூட்டடுப்பை விரும்பி பாவிக்கின்றனர். ஆனால் சிற்றுண்டிச் சாலைகளுக்கு பொதுவாக குறைந்த வெப்பம் தேவையில்லை. ஆதலால் கூடிய வெப்பத்தைப் பெறக்கூடிய முறையிலும் இதனைப் பாவிக்க முடிகிறது.

இதன் மூலம் சக்திப் பகுதியினரின் இப்படியான நன்மை பயக்கக்கூடிய செயற்பாடுகளால் நாம் ஒரு தன்னிறைவான பொருண்மியத்தை கட்டியெழுப்புவதில் எதுவித ஐயமுமில்லை. ★

(தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்)

தெலுங்கு சங்கீத இராமாயணத்துக்கு நிகராக

# தமிழிலும் 'சங்கீத இராமாயணம்' படைக்க ஒருமனதாக முயற்சி செய்வது அவசியம்

*வட இலங்கை சங்கீத சபை நடத்தும் சற்குரு ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் இசை ஆராதனை விழா இப்போது நடைபெறுகிறது. அதனையொட்டி சபையின் உபதலைவரும், மூத்த இசைக் கலைஞருமான கட்டுரையாளர் புதிய ஆலோசனை ஒன்றை முன் வைக்கிறார்.*

அகில உலகமும் ஸ்ரீதியாகராஜன் சங்கீதத்தை இன மத மொழி பேதமற்ற நிலையில் இன்று கொண்டாடி ஆத்ம சாந்தியடையும் நிலையொன்று உருவாகியுள்ளது.

சைவமக்கள் சிதம்பர தரிசனம் செய்ய இந்தியாவுக்கு போவதுபோல, முஸ்லிம் மக்கள் 'மக்காவுக்'கு யாத்திரை செய்வது போல, கிறீஸ்தவர்கட்கு ''றோமாபுரி'' போல, கருநாடக சங்கீத கலைஞர்கள், வித்துவான்களுக்கு இந்திய தஞ்சாவூர்—திருவையாறு தியாகையர் சமாதி ''சங்கீதக் கோவில்'' இருந்து வருகிறது.

வருடாவருடம் திருவையாறில் தியாகையர் சமாதியான தைமாசப் பகுன பஞ்சமித் திதிநாள் முன்னும் பின்னுமாகத் தொடர்ந்து 5-6 நாட்களுக்கு அங்கு நடக்கும் சங்கீதசற்குரு ஸ்ரீ தியாகராஜ இசை மகோற்சவ ஆராதனை மிக விசேடமானது. அந் நிகழ்வுகளை திருச்சி வானொலி அஞ்சல் செய்வதால் இன்று அகில உலக இசைவிழாவாக மாறிவிட்டது. இசையில் ஆர்வமுள்ள பல நாட்டவர்களும் திருவையாறு இசைவிழா வானொலி அஞ்சல் இசை கேட்டு மகிழ்வதுண்டு.

ஈழத்திலும தியாகையர் இசை ஆராதனை விழாக்கள்— பல இடங்களிலும் நடத்தப்பட்டு வருவது வழக்கமாகிவிட்டது.

யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலையை நாம் பார்க்கும் போது, இலங்கையை ஆண்ட இராவணன் காலமே திரும்பி, தமிழர் வாழும் இடம் எல்லாம், பாடசாலைகள் சகலதிலும், மகரவீணையின் மந்திர ஒலியும் ஆடலும். அமிழ்தின் ஆன்ற பாடலும் நிறைந்து நிற்கும் நீர்மையை நாம் கண்ணாரக் கண்டு மகிழ்கிறோம்.

இன மத மொழி பேதமற்றது சங்கீதம் என்று பொதுவாகச் சொல்லப்படுவதுண்டு. நம்முடைய தாய்மொழி நமக்குப் பரம்பரைச் சொத்து. ஆகவே நாம் நமக்கென நமது தாய்மொழியில்தான் நமது சங்கீதக் 'குடியரசை' யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

வால்மிகி இராமாயணத்திற்கும் மேல்தர நிலையில் கம்பன் தமிழில் கம்பராமாயணம் ஆக்கித் தந்து விட்டான். நாமும் அதே ரீதியில் தியாகையரது – தெலுங்கு ''சங்கீதராமாயணத்திற்கு'' ஓர் அரிய தமிழ் சங்கீத ராமாயணத்தை உண்டாக்கி விடலாமல்லவா? எல்லோரும் சேர்ந்து ஒருமனதாக வளர்க்க வேண்டியதே தமிழ் சங்கீத இராமாயணமாகும்.

பாபநாசஞ்சிவன் தியாகையர் வழியில் – அவரது கீர்த்தனை நவீன மெட்டுகளைப் போலவே அவர் பாணியில் தமிழ் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்.

### மந்திர சக்தி

இசையின் நோக்கம் ஆத்ம திருப்தியளிக்க வேண்டும். வாய்ப்பாட்டு ஒன்றினால் தான் பாட்டின் பொருள் பாவத்தை கேட்டனுபவிக்க முடியும். பாடுபவரும், ரசிப்பவருமான இரு சாராரும்

சங்கீதபூஷணம்
**பி. சந்திரசேகரம்**

ஒருங்கே அவரவருக்குத் தெரிந்த மொழியிலேயே பாட்டிசைக்க வேண்டும். பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்'' என்கின்றனர் நாம் இந்த இலக்கை நிறைவேற்ற உழைக்க வேண்டும்.

தியாகையரின் விசேடம் அவரது கிருதியிலுள்ள சங்கீத நடை, சங்கீத உருவம் — இவை உயிர்த்துடிப்பாக நிற்கின்றன. அவரது கீர்த்தனைகளைக் கேட்க இதயம் உருகுகிறது. சிந்தை தளர்ந்து ஜீவனற்றுப் போனது போன்ற உணர்ச்சி உண்டாகிறது. தியாகையர் சங்கீதம் மந்திர சக்தி கொண்டது.

தியாகையர் சங்கீத உலகில் முதலிடம் வகிக்கிறார். 18ஆம் நூற்றாண்டில் கடைச் சங்ககாலத்தின் பின் மேடைச் கச்சேரிகள் இருந்து வருகின்றன. திரைப்படவுலகம் வந்ததும் மேடைக் கச்சேரி கேட்கும் வழக்கம் மக்களிடையே சற்றே குறைந்து வந்துள்ளது உண்மை தான்.

எனினும் தமிழ்நாட்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சங்கீத பட்டப்படிப்பை (சங்கீத கலைமாணி, முதுமாணி) நடத்தி அவற்றுக்கும் மேலாக கலாநிதி பட்டமும் வழங்குகிறது.

அதே போல சென்னை இசை வித்துவ சபையினரால் பெரும் இசை மேதைகளுக்கு வருடாந்த இசை விழாக்களில் — மாநாடுகளில் — வைத்து பட்டம் அளிக்கப்படுகிறது.

இந்த மரபு சங்ககால நிகழ்வுகளை நினைவூட்டி நிற்கிறது.

இங்கு யாழ்ப்பாணத்திலும், கம்பன் கழகம், அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் ஆகியன இசைக் கலைஞர்களுக்குபட்டம் அளித்துக் கௌரவித்து வருவது பாராட்டுதலுக்குரியது.

### சங்கீத சபை

இதேவேளை வடஇலங்கை சங்கீத சபை கடந்த 64 வருடங்களாக தனது இசைத்துறைச் சேவையை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

வருடாந்தம் சுமார் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இசை மாணவர்கள்— இசைப் பரீட்சார்த்திகள்— இச்சபையில் முதலாம் தரத்திலிருந்து 6ஆம் தரம் வரையான பரீட்சைக்குத் தோற்றுகின்றனர் இசை, பண்ணிசை ஆகிய பல துறைகளில் இப்பரீட்சைகள் நடைபெறுகின்றன.

6ஆம் தரப் பரீட்சையில் சித்தி எய்தியவர்களுக்கு இசை ஆசிரியர் தராதரப் பத்திரம் வழங்கப்படுகிறது. சபையின் இசை ஆசிரியர் தராதரப் பத்திரம் பெறுபவர்கள் மகாவித்தியாலயங்களில் இசை ஆசிரியர்களாக நியமனம் பெறுவதற்குத் தகுதி உடையவர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவில் பயின்று சங்கீதக் கலைமணி [Diploma in Music) பட்டம் பெறுவோரும் வட இலங்கை சங்கீத சபையின் ஆறாம் தர இசையாசிரியர் இறுதித் தேர்வுக்குத் தோற்றி இசை பயிற்றுவிக்கும் போதனா முறையில் பாண்டித்தியம் பெறுகிறார்கள்.

இத்தகைய சேவை புரிந்து வரும் வட இலங்கை சங்கீத சபைக்கு சகல வசதிகளுடனும் கூடிய இசைக் கல்வி வள நிலையம் ஒன்று அவசியம். இசை வாத்தியங்கள், இசை நூல் நிலையம், கண்காட்சி கூடம், கலா மண்டபம், ஒலி, ஒளிப் பதிவு சாதனங்கள் ஆகிய வசதிகள் கொண்டதாக — முழு அளவிலான — இசைக் கல்வி வள நிலையம் ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படுவது அவசியமாகிறது.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவின் பரீட்சைகளுக்கு, வட இலங்கைச் சங்கீத சபை ஊடாக வெளிவாரி மாணவர்கள் தோற்றுவதற்கு வசதி செய்வது குறித்து ஆலோசிக்கப்பட வேண்டும். இதன் பொருட்டு வட இலங்கை சங்கீத சபையை உயர்கல்வி அமைச்சும் அங்கீகரிப்பதற்கான வழிவகைகளை ஆராய வேண்டும். ★

## நன்றி நவிலல்

திருமதி
**செல்வமணி வேதநாயகம்போல்**
(மாகியம்பதி)

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும், அஞ்சல் வழியிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிச் சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும், எட்டுச் சடங்கிலும் மதிய போசனத்திலும் பங்குபற்றி சிறப்பித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்.

(சி-310) (வே. ஆ. செல்வநாயகம் )

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் : 01 — 07 — 1932



அம்பிகை அடியில் : 24 — 12 — 1994

திருமதி
**கனகம்மா காமாட்சி சுந்தரம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியை, நயினாதிவு)

பின்னையும் கன்னியென மொழிபேசும் அன்னையே! உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்,

இன்று(22—01—1995) ஞாயிறு எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்வில் பங்குபற்றும்படி அன்பாக வேண்டிக் கொள்கிறோம்.

- குடும்பத்தினர்

''கோமுகி''
கைதடி.

(34802)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

முட்டை இட்டுக்கொண்டிருக்கும் 50 ஹைலைன் கோழிகள், 4 சோடி பான்ரெயில் புறாக்கள் விற்பனைக்குண்டு. ந. வரதராசா, ராஜ் கோபால்ஸ் களஞ்சியம் (மட்டுவில் உபதபாற்கந்தோர் அருகில்), மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. [34785]

பசன்கன்று விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 10/- மட்டும். தக்காளிக்கன்று 20சதம். ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி)லிமிட்டெட், 14,சினியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-187)

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி பாற்பண்ணைக்கு அருகில் பரப்பு 1¾ காணி [குழாய்க் கிணறுடன்] விற்பனைக்குண்டு தொடர்பு: திருமதி இரட்ணசிங்கம், ''கைலாசவாசா'', சின்ன முத்துத்தம்பி பாடசாலைக்கு முன்பாக, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. [34722]

### டயறிகள்

சிறிய பெரிய அளவுகளில் பூபாலசிங்கம் டயறிகள் வெளிவந்து விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. பூபாலசிங்கம் புத்தக நிலையம் யாழ்ப்பாணம். [சி-286]

### பணிப்பெண் தேவை

வயது வந்த கணவன் மனைவியுள்ள வீட்டிற்கு வீட்டோடு இருந்து வேலைகளை செய்வதற்கு 35—50 வயதிலுள்ள பெண் உதவியாள் தேவை. சம்பளம் நேரில் பேசப்படும். இல. 25, மாட்டின் றோட், யாழ்ப்பாணம். (34739)

உடல் நலம் குன்றிய வயோதிப மாதுவை கவனிக்கக் கூடிய பெண் உதவியாளர் தேவை. வயது30—50 நேரில் வரவும். ஊதியம் பேசிக் கொள்ளலாம். இல. 90/4, கல்லூரி விதி, நீராவியடி, யாழ்ப்பாணம். [34788]

### POLITICAL SCIENCE

G. C E. A/L and B. A. இலங்கையின் தேர்தல்கள், 94 பொதுத்தேர்தலும், சிறுபான்மை இனங்களும், இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சி தெரிவு செய்யப்பட்ட நாடுகள், கட்சிமுறைகளும், உள்ளூராட்சி முறைகளும் வெளிநாட்டு கொள்கைகளும் இவ் ஐந்து புத்தகங்களின் ஆக்கம்: பீ. எம். புண்ணியாமீன் B. A. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-295)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கும் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் அணித்தாய் 31, கதீட்ரல் வீதியில் அமைந்துள்ள ¾ பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 31, கதீட்ரல் வீதி (பிலிப்ஸ் டிஸ்பென்சரிக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (34793)

### புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. 54/2, சந்தன மாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [34797]

### சவர்க்காரம்/சலவைத்தூள்

கடின நீரிலும் நுரைவளம் பெருக்கித் துணியிலிருந்து அழுக்கையும் பிசுக்கையும் துரிதமாக அகற்றும் மில்க்வைற் சோப் / சலவைத்தூள் எங்கும் கிடைக்கிறது. நீல சோப் கட்டி ஒன்று ரூபா 6/- சலவைத்தூள் பக்கற் ஒன்று ரூபா 6/- 25 வெற்றுப் பக்கற்றுகள் / மேலுறைகள் வழங்கி ஓர் அப்பியாசக் கொப்பியைப் பெறலாம். ''மில்க்வைற்'' [சி-407]

### புலமைப் பரிசில் - 95

யாழ். Bond நிறுவனத்தாரால் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ் விடைகளுடன் 10/- மட்டும்) மாதத்தில் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. முன்னணி புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். [8187]

### ரி. வி., டெக் திருத்துதல்

சகல றேடியோக்கள் ரி.வி. டெக் எல்லா விதமான மணிக்கூடுகளையும் பழுது பார்த்துக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம்சந்தி], யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. [சி-254]

### தவறிவிட்டது

த. புவனேஸ்வரன் ஆகிய நான் கிளிநொச்சியிலிருந்து யாழ். நோக்கி வரும் வழியில் ஒரு மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள்: இல. 1, ஸ்கைரோஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (34801)

## திரு பட்டப்படிப்புப் பிரிவு

கோண்டாவில்

(யாழ்ப்பாணம், பேராதனை.)

1995 இல் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கான

**துரித மீட்டல் வகுப்பு**

G. A. Q. / Ist. in Com. ] 1995

பொருளியல்: திரு. உதயன் (B. B. A) SP

ஆரம்பம்: 01 - 02 - 1995

மாலை 5 மணி

(சி/ 405)

## 31-ம் நாள் நினைவுடன்...



அன்னை மடியில் : 02 — 08 — 1929

இறைவன் அடியில் : 23 — 12 — 1994

**அமரர் சண்முகம் சிவகுரு**

இல் சிறக்க தலைவனாய் வழிகாட்டி — எம்
வாழ்வினிக்க வகை சொல்லி
மல்வில் மாலவன் மலரடி சேர்ந்தனையோ,
சாந்திக்கு துதிப்பதல்லால் என் செய்வோம் இனி.

— குடும்பத்தினர்.

பேராலை,
பளை.

(34799)

இன்று 22-01-95 ஞாயிற்றுக்கிழமை
முழுவதும் பக்தர்கள்

## எண்ணெய்க்காப்பு

இடம்: இணுவில் காயத்ரீ பீட
கண்ணகா பரமேஸ்வரி
தேவஸ்தானம்

கும்பாபிஷேக மங்கல வைபவம்
23-01-95 திங்கட்கிழமை
காலை 9-30மணிமுதல் 11 மணிவரை

திருப்பணிக்கும் வண்ணப்பூச்சுக்கும் நன்கொடையளித்த சைவ அபிமானிகள் அனைவரையும் ஆசீர்வதித்து அழைப்பவர்:

சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்

இங்ஙனம்,
திரு. செ. திருவிளங்கம்,
மேற்படி ஆலய தர்மபரிபாலகர்.

(34789)

## மண்டேலா இந்தியா விஜயம்

தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா இன்னும் சில தினங்களில் இந்தியாவுக்கு விஜயம் செய்ய இருக்கிறார்.

தென்னாபிரிக்க ஜனாதிபதி ஒருவர் இந்தியாவுக்கு விஜயம் செய்வது இதுவே முதற்தடவையாகும்.

26 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்திய சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் மண்டேலா பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

## ஆசிரியர் சேவைக்கான பதவி வெற்றிடம்

★ ஆண்டு 6 தொடக்கம் 11 வரை கணிதம், விஞ்ஞானம் கற்பிக்கக் கூடிய க. பொ. த. உயர்தரம் சித்தி எய்திய தகுதிவாய்ந்தோர் விண்ணப்பிக்கவும்.

★ க. பொ. த. உயர்தரத்தில் சித்தி எய்திய தமிழ், ஆங்கிலம் தட்டச்சு செய்யக் கூடியவர்களும் விண்ணப்பிக்கவும்.

முடிவு திகதி: 28 – 01 – 1995

விண்ணப்பிக்கும் முகவரி:

இல. 752,
C/O உதயன்,
யாழ்ப்பாணம்.

(34791)

## உயர் இரத்த....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு ஏற்கனவே உயர் இரத்த அழுத்த வியாதி இருந்தால் அல்லது உடலில் டயபற்றிஸ் மற்றும் சிறுநீரகத்தில் அடிக்கடி கிருமிகள் படிந்திருத்தல், கற்கள் உண்டாகியிருத்தல் ஏதேனும் வேறு வியாதிக்காக பிரிட்னிசிலோன் பயன்படுத்தல் போன்றவர்கள் கட்டாயமாக இதைச் செய்தல் நல்லது.

★ கர்ப்பிணித் தாய்மார்களும் அடிக்கடி இரத்த அழுத்தத்தை பரிசோதித்துக் கொள்வது நல்லது.

★ குழந்தைகள் சிறுபிள்ளைகளுக்கு கைகளில் கால்களில் அவிச்சல்கள் புண்கள் ஏற்படுகின்றபொழுது, தாமதிக்காமல் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். இதன் மூலம் சிறுநீரகங்களில் ஏற்படும் பிரச்சினையைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

★ இதன் மூலம் படிப்படியாக எமக்குத் தெரியாமல் ஏற்படுகின்ற உயர் இரத்த அழுத்த வியாதியைத் தவிர்த்து அனைவரும் ஆரோக்கியமாக வாழலாம். ★

# வெற்றிவாகை சூடிய ஃபிறீஸியன் பசுக்களின் செழுமையும் போசாக்கும் மிக்க பால்



...உங்கள் பிள்ளைக்கு.

உங்கள் பிள்ளை ஃபாம் ட்ரஸ்ட் முழுஆடைப்பாலின் பாலாடைச் சுவையை நிச்சயம் விரும்பும். ஏனெனில் ஃபாம் ட்ரஸ்ட் உலகிலேயே சிறந்த பால்தரும் இனமான ஒல்லாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஃபிறீசியன் பசுக்களின் புதுமை குன்றாத பால்.

ஃபாம் ட்ரஸ்ட் பாற் புரதங்கள் நிறைந்ததும் உண்மையிலேயே போசாக்கும் மிக்கது. அதன் தரச்சிறப்பு உற்பத்தியின் முதற்படியிலிருந்தே உத்தரவாதமளிக்கப் படுகின்றது. விற்றமின்கள் சேர்க்கப்பட்ட ஃபாம் ட்ரஸ்ட் ஒரு ஒல்லாந்து ஹுக்வெற் பி. வியின் உற்பத்தி.







LDB LINTAS

# ஃபாம் ட்ரஸ்ட்

*நீங்கள் நம்பத்தகுந்த பால்*

முகவர்:- ஸ்ரீ விக்னேஷ்வரா ஸ்டோர்ஸ் சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.

(சி-168)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## தட்டிக்கழிப்பு

காணாமற் போனவர்கள் குறித்து விசாரிப்பதற்காக அரசாங்கம் ஆணைக்குழுக்களை நியமித்துள்ளது. 1988ஆம் ஆண்டிலும், அதற்குப் பின்னரும் காணாமற் போனவர்கள், அதற்கு உடந்தையாக இருந்தவர்கள், அது நிகழ்ந்த சூழ்நிலை என்பன குறித்து இந்த ஆணைக்குழுக்கள் விசாரிக்க உள்ளன.

பிரஸ்தாப ஆணைக்குழுக்களின் அதிகாரங்கள், அவற்றின் செயற்பாடுகள் என்பன குறித்து விளக்குவதற்காக, நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் அண்மையில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

அதில் கலந்து கொண்ட பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர், கேட்க வேண்டிய மிக முக்கியமான கேள்வி ஒன்றை அங்கு எழுப்பினார்.

ஆணைக்குழுக்கள், 1988ஆம் ஆண்டிற்குப் பின்னர் காணாமற்போனவர்கள் குறித்து மட்டுமே விசாரிக்க உள்ளன. இந்த விடயத்தில் 1983ஆம் ஆண்டைத் தவிர்த்தது ஏன்? — என்பதே செய்தியாளரின் அந்தக் கேள்வியாகும்.

தமிழர்களைப் பொறுத்த வரையில், 1983ஆம் ஆண்டுக்கு முன்னரே காணாமல் போகச் செய்யப்பட்டனர். 1983ஆம் ஆண்டில், ஒரு சில நாள்களில் மிகப்பெரும் எண்ணிக்கையானோர் காணாமற் போயினர். ஆயிரக்கணக்கில் கொடூரமாகக் கொலையும் செய்யப்பட்டனர்.

அதுமட்டுமா? அதன் பின்வரே வடக்கு - கிழக்கில் இராணுவ அடக்கு முறையும் அட்டூழியமும், அடாவடித் தனமும் பெருகின. தமிழர் பிரதேசத்தில் நாளுக்கு நாள், மணிக்கு மணி, நிமிடத்துக்கு நிமிடம் தேடுதல், சுற்றி வளைப்பு என்ற போர்வையில் தமிழ் இளைஞர்களும், ஏனையோரும் காணாமற் போகச் செய்யப்பட்டனர்!

காரணம் எதுவும் இன்றிக் கைது செய்யப்பட்டவர்கள் முகமூடிகள், — தலையாட்டிகள்— தலை அசைத்த ஒரே காரணத்தால், ஆயிரம் ஆயிரமாகக் காணாமற்போக வேண்டியதாயிற்று.

இதற்கு முழுக்க முழுக்கக் காலாக இருந்தவர்கள் — காணாமல் போகச் செய்தவர்கள் — அரசாங்கப் படையினர் என்பது மிக வெளிச்சமானது. இந்த அநியாயத்தை — மனித உரிமை மீறலை — செய்தாலும் தமக்குத் தண்டனை எதுவும் இல்லை; தண்டனை தவிர்ப்புச் சட்டம் தம்மை பாதுகாக்கும்; என்ற துணிவில் அவர்கள் தங்கள் கோரத் தண்டவங்களை தாராளமாகக் கட்டவிழ்த்துவிட்டதுண்டு.

இப்போது இராணுவத்தில் உயர் பதவி வகிக்கும் பலரும், அப்போது இளைய அதிகாரிகளாக இருந்து இந்த அக்கிரமத்தை வழி நடத்தி இருப்பர். எனவே 1983 — 88 ஆம் காலப் பகுதியையும் விசாரணைக்குள் அடங்கினால், இராணுவ அதிகாரிகளின் வெறுப்பைச் சம்பாதிக்க நேரிடும் என்று அரசு அஞ்சியிருக்கலாம்.

மேற்கூறப்பட்ட காலப் பகுதியையும் உள்ளடக்கினால் இந்திய இராணுவத்தினரின் அட்டூழியங்களும் தெரியவரும். ஆணைக்குழு விசாரணை மூலம் அதனை வெளிப்படுத்தி இந்தியாவின் முகச்சுழிப்பை எதிர் கொள்ளவும் அரசு இயற்கையாகவே விரும்பியிருக்காது.

அதனாலேயே, 1983-1988 காலப்பகுதியை மெதுவாக, மௌனமாகத் தவிர்த்துக் கொண்டு புத்திசாலித்தனமாக, வெறுப்பு, முகச்சுழிப்பில் இருந்து தப்பித்துக் கொள்கிறது.

அதனாலேயே, பி. பி. ஸி. செய்தியாளரின் கேள்வி உபயோகமற்ற விமர்சனமாக நீதி அமைச்சருக்குத் தோன்றியது.

ஏதோ ஒரு காலத்தில் இருந்து தொடங்க வேண்டும் அதனால் 1988 இல் இருந்து ஆரம்பித்திருக்கிறோம். இந்த விசாரணை முடிந்ததும், 1983 வரை விஸ்தரிப்பது குறித்துச் சிந்திக்கலாம் என்று அசாத்தியத் தொனியில் தட்டிக் கழித்து விட்டார்.

தமிழர் விடயங்களில் புதிய அரசுக்குள்ள அக்கறை இந்த வகையினது தானா?

# பாப்பரசர் கருதுகின்ற நீதியான தீர்வை காணும் சக்தி சந்திரிகாவுக்கு உண்டா?

இனப்பிரச்சினைக்கு நீதியான சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும்—என்று இலங்கை வந்திருந்த பரிசுத்த பாப்பரசர் பிரார்த்தனை செய்திருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகா வழங்கிய வரவேற்பில் உரை நிகழ்த்திய பாப்பரசர், இதனைப் பிரார்த்தனையாகக் கூறினார் என்றால், அரசாங்கம் இனப்பிரச்சினையை நீதியான முறையில் தீர்த்து வைக்க வேண்டும் என அவர் விரும்புகிறார் என்பதே அர்த்தம். அரசாங்கத்துக்கு —



சந்திரிகா

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு — இடித்துரைத்திருக்கிறார் என்று மறைமுகப் பொருள் படுகிறது.

சந்திரிகா குமாரதுங்காவின் அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் நோக்கத்துடன் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்கியிருப்பது

கொண்டுவரப்படும் தீர்வு நீதியானதாக இருக்க வேண்டும் என்பதனையே பொதுவான எவரும் எடுத்துச் சொல்வர். பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் விதத்தில் தீர்வு அமையவேண்டும் என்றே நடுவுநிலைமை கொள்ளும் எவரும் கூறுவர்.

இதனை ஸ்ரீலங்கா அரசாங்கமும், தென்னிலங்கை அரசியல்வாதிகளும், அங்குள்ள பேரினவாதிகளும், சிங்கள மக்களும் கூட கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

ஏனெனில், தமிழர் விவகாரத்துக்குத் தீர்வு காண்பது என்று தெற்கின் அரசியல் தலைவர்கள் கூறும் போதெல்லாம், சிங்களவர்களுக்குச் சாதகமான தீர்வாக இருக்க வேண்டும் என்பதனையே உள்நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் விருப்பு, வெறுப்புக்கு ஏற்ற வகையில், தீர்வு ஒன்றை வகுத்து, அதனைத் தமிழர்கள் மீது திணிப்பது என்பதே அவர்களது நிரந்தர சிந்தனையாக இருந்து வருகிறது.

நீதியான தீர்வு ஒன்று வந்தால் மட்டுமே, நீதியான சமாதானம் உருவாகும். அதனாலேயே தமிழர்கள் எப்போதும் நீதி நிறைந்த சமாதானம், நீதி பொலியும் அமைதி என்று வற்புறுத்தி வருகிறார்கள்.

### இனி ஒரு போர் நிகழக்கூடாது; சந்திரிகாவின் இலக்கு இதுவாம்

பாப்பரசருக்குத் தெரிந்திருக்கும். அந்தச் சமாதான முயற்சி மூலம், பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு நீதியான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே பாப்பரசரின் கருத்து என்பதில் இரண்டு அபிப்பிராயங்கள் இருக்க முடியாது.

இதனை ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது அரசாங்கத்தினரும் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம்.

ஒரு சில சுயநல, பேரினவாதக் குழுக்களைத் தவிர, நாட்டின் மிகப்பெரும்பாலான மக்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று அவசியம் என்பதை உணர்ந்துள்ளனர். கடந்த வருடம் நடைபெற்ற இரண்டு பிரதான தேர்தல்கள் ஊடாக இந்த உணர்வு பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அந்தத் தீர்வு எப்படி அமைய வேண்டும்; எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதில் தான் ஒருமனதான கருத்து இல்லை. வெவ்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன; வெளிப்படுத்தப்படுகின்றன.

#### நீதியான தீர்வு

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில் மிகுந்த அக்கறையுடன் செயற்படுகிறார் ஜனாதிபதி சந்திரிகா. எத்தனை தடங்கல்கள், இடையூறுகள் வந்தாலும் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பது என்ற தமது இலக்கில்இருந்து அவர் எப்போதும் பின்னிற்க மாட்டார் என்று அவருடன் மிகநெருங்கிய வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

#### கௌரவமான தீர்வு

சந்திரிகா இம்மாத முற்பகுதியில் நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில்—

இனப்பிரச்சினைக்கு கௌரவத்துடனான தீர்வு (Peace with Honour) காணப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார். பாப்பரசர் விரும்பும் — வலியுறுத்தும் — நீதியான தீர்வுக்கும் (Peace with Justice) சந்திரிகா விரும்பும் கௌரவத்துடனான தீர்வுக்கும் பெரிதாக வித்தியாசமில்லை.

தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் ஆகிய எல்லா இனங்களினதும் கௌரவத்தைப் பாதிக்காத வகையில், ஒரு தீர்வைக் கொண்டு வர வேண்டும் என்பதே சந்திரிகாவின் விருப்பம் என்பதை அறிய முடிகிறது. நாட்டின் தலைவர் என்ற வகையில், அவர் அவ்வாறு கருதுவதில்

**அரசியல்**

தப்பில்லை.

ஆனால், தமிழர்களுக்குச் சேர வேண்டிய பல நியாயமான, நீதியான உரிமைகளை அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது, சில உரிமைகள் தமக்கு மட்டுமே சேர வேண்டும் என்ற சிங்கள சக்திகளின் சிந்தனையே இனப்பிரச்சினைக்கு என்றும் முட்டுக்கட்டையாக இருந்து வந்திருக்கிறது.

## சிங்களவரின் விநோத உரிமைகள் நீக்கப்பட்டாலே அது சாத்தியம்

தமிழர்களின் சில பிறப்புரிமைகளை அவர்களுக்குச் சேராமல் தடுப்பது தங்களின் உரிமை என்ற விநோதமான கருத்து அவர்களிடையே வளர்ந்துள்ளது. இங்கே தான் சந்திரிகா விரும்பும் கௌரவமான தீர்வு எவ்வாறு அமையப் போகிறது என்ற முக்கியமான கேள்வி எழுகிறது.

சிங்கள மக்களுக்குள்ள உரிமைகளைப் பாதிக்காத விதத்தில் — அவர்களுடைய கௌரவத்துக்குக் குந்தகம் உண்டாக்காமல் — இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற பாங்கில் அவர் அடிக்கடி கருத்து வெளியிட்டு வருகிறார்.

#### எவ்வாறு சமாளிப்பார்?

தமிழர்களுக்குரிய உரிமைகளை மறுப்பதும் தமது உரிமை என்று கருதும் சிங்களப் பேரினவாதத்தையும் அதன் ஓர் அங்கமான பௌத்த மத சங்கத்தையும் சந்திரிகா எவ்வாறு சமாளிக்கப் போகிறார்? தமிழர்களுக்கு உரிய உரிமைகளை வழங்குவதன் மூலமே கௌரவமானதும், நீதியானதுமான தீர்வைக் காண முடியும் என்பதனை இவர்களுக்கு எவ்வாறு புரிய வைக்கப் போகிறார்? அது இயலக் கூடிய காரியமா?

உதாரணமாக, வடக்கு — கிழக்கு இணைந்த தாயகம் தமிழர்களுடைய முதுசொத்து என்ற அவர் தம் பிறப்புரிமையை, அங்கீகரிக்கும் நிலையில் சிங்கள பௌத்த பேரினவாதம் இல்லை.

ஆனால் தமிழர் தாயகத்தை அங்கீகரிக்காமல் இனப்பிரச்சினைக்கு நீதியான கௌரவமான தீர்வை எட்ட இயலாது. எனவே இந்தச் சிக்கலான நிலையிலிருந்து சந்திரிகா எப்படி விடுபடப் போகிறார்; எழுந்து நின்று கருமமாற்றப் போகிறார் என்பதிலேயே எல்லாமே தங்கியுள்ளது!

சிங்களவர்களுக்கு உள்ள உரிமைகளை நீதியின் பால் நின்று வரையறுக்க வேண்டிய தேவை ஒன்று உண்டு. இலங்கையின் பெரும்பான்மை மக்கள் — அல்லது மக்கள் எண்ணிக்கையில் கூடிய இனக் குழுவினர் —என்பதால் சிங்களவர்கள் தமது உரிமைகளை வரையறுக்காமல் வானை முட்ட அளந்து காட்டுவது ஏற்கக் கூடியதல்ல—

எப்போதும் ஒருவனின் உரிமைகள், அடுத்தவனின் உரிமைக்குக் குந்தகம் விளைவிக்காமல் இருக்க வேண்டும் என்பதே பொது நியதியும், நீதியுமாகும்.

#### வரையறை வேண்டும்

இந்த அடிப்படையில் சிங்கள மக்களின் உரிமைகளை வகுத்து வரையறுக்க வேண்டிய தேவை ஒன்று உண்டு அதனை வெற்றிகரமாகச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு சந்திரிகா தலையிலேயே விழுந்துள்ளது. அதனை ஒப்பேற்றக் கூடிய விவேகமும் புத்திசாதுரியமும் துணிச்சலும், மன உறுதியும் அவருக்கு நிறையத் தேவைப் படுகின்றன.

சிங்கள மக்களுக்குள்ள உரிமைகளை நீதியான முறையில் வகுத்துக் கொண்டால் தான், தமிழர்களுக்கு நீதியானதும், கௌரவமானதுமான தீர்வை வழங்கமுடியும்.

இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காண வேண்டும் என்பதில் உறுதியாக உள்ள சந்திரிகா, தமிழர்களுக்கு உள்ள உரிமைகளை சிங்கள மக்கள் அங்கீகரிப்பதற்கான வழிவகைகளைத் தம்மிடம் வைத்திருக்கிறார் என்று அவருடன் மிக நெருங்கிய வட்டாரங்கள் சூரியகாந்திக்குத் தெரிவித்தன.

அப்படியானால், அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை தடக்குப்பட்டு, தட்டுப்பட்டு, நத்தை வேகத்தில் நகர்வது ஏன்?

இனப்பிரச்சினை நீண்டகாலப் பிரச்சினை. தெற்கின் தீய சக்திகள் பல ஒன்று சேர்ந்து வளர்த்துவிட்ட பிரச்சினை. நான்கு வருடப் போரும் தெற்கில் பல சக்திகளுக்கு சட்டவிரோதமாகப் பணம் திரட்ட உதவியுள்ளது. ஆகையால் இந்தச் சக்திகளை ஒரேயடியாகப் பகைத்துக் கொண்டு நிலைமையைக் கெடுக்காமல், தமது சாதுரியமான அணுகு முறைகளால் அவர்களை மென்மைப் படுத்தி, தமது வழிக்குக் கொண்டுவருவதில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார்.

#### தடங்கல் தவிர்க்க முடியாதது

ஆகையால், இப்போதைய



பாப்பரசர்

ஆரம்ப கட்டத்தில் பல தடங்கல்கள், தடைகள் உருவாகுவது தவிர்க்க முடியாதது. சந்திரிகா ஒன்றைச் செய்ய வேண்டும் என்று மனதார நினைத்துவிட்டால் அதனை ஈட்டும்வரை சலிப்பின்றி உழைக்கும் பழக்கமுள்ளவர். தமக்கு முட்டுக்கட்டை போடும் சக்திகளை முறியடித்து, விடாமுயற்சியுடன் முன்னேறும் சக்தி கொண்டவர்—

மிகச் சிக்கலான இனப்பிரச்சினையைத் தீர்ப்பது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, அதனைக் கையாள்வதற்கு, சந்திரிகாவுக்கு சிறிது கால அவகாசம் கொடுக்கத் தானே வேண்டும் — என்று அந்த வட்டாரங்கள் வாதம் செய்கின்றன.

இனிமேல் இந்த நாட்டில் போர் ஒன்று நடக்கக் கூடாது; மக்கள் அழிந்து போகக் கூடாது; அதற்கான, அமைதியான, சமாதானமான சூழ்நிலையை உருவாக வேண்டும் என்பதனை ஜனாதிபதி சந்திரிகா தனது கொள்கையாக வரித்துக் கொண்டுள்ளார் என்றும் அந்த வட்டாரங்கள் மூலம் தெரிய வந்தது.

இதனால், தற்போது உண்டாகியுள்ள தடங்கல்கள், தடைகளை விடுதலைப் புலிகள் பெரிதுபடுத்தமாட்டார்கள் என்ற நம்பிக்கையும் சந்திரிகாவுக்கு உண்டாம். போர் இடைநிறுத்தம் நீடிக்க வேண்டும்; நீடிக்கும் என்பதும் அவரது பெரும் இச்சையாக இருப்பதாக அறியப்படுகிறது.

#### முன் எடுக்கிறார்

தமக்குள்ள சில கஷ்டங்களையும், தமது நிலைப்பாடுகளையும் சில இணைப்பு வட்டாரங்கள் ஊடாக விடுதலைப்புலிகள் தலைவர்களுக்கு தெரியப்படுத்துவதிலும் ஜனாதிபதி சந்திரிகா ஈடுபட்டு, பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக முன்னெடுத்து வருவதாகவும் சொல்லப்பட்டது.

பேச்சுவார்த்தை விடயத்திலும், இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் ஜனாதிபதி தாமே நேரடியாக நிலைமையை அறிந்து, சொந்த முடிவுகளை மேற்கொள்வதற்கு இது பெரிதும் உதவும் என்று அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் கருதுகின்றன.

தாம் சொந்தத்தில் எடுக்கும் முடிவுகளை, சம்பந்தப்பட்டவர்களையும் கலந்தாலோசித்தேஎடுத்தார் என்று அவர்களே எண்ணும் விதத்தில், சந்திரிகா சாதுரியமாகவும், மறைமுகமாகவும் செயற்படுவதாகவும்சொல்லப்படுகிறது. அதாவது தமக்குள் ஒரு முடிவை எடுத்துக் கொண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு அதனைத் தெரியப்படுத்தாமல் புதிதாக அவர்களுடன் கலந்தாலோசிப்பது போலக் காட்டிக்கொண்டு அவர்களே தாம் எடுத்த முடிவுக்கு வரும் விதத்தில் பந்தை அவர்கள் பக்கம் போட்டு தாம் எண்ணியதை அவர்களூடாகவே வந்த முடிவாக்கி விடுகிறார். குறிப்பாக படை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் அவர் இந்தத் ''தந்திரத்தை'' கையாள்கிறார் என்று தெரிய வருகிறது.

### நிலைமைகளை தாமே நேரில் அறிந்து பேச்சை முன்னெடுப்பார்

பேச்சுவார்த்தை, இனப்பிரச்சினைத் தீர்வு ஆகியன தொடர்பாக அவர் அமைச்சர்களை அதிகம் நம்பியிருக்கவில்லை. தம்மைச் சுற்றியுள்ள, தமக்குப் பிடித்த, தமக்கு மிக நெருக்கமான ஒரு குழுமத்தையே அவர் தமது பக்கத்துணையாகக் கொண்டுள்ளார், அந்தக் குழுமத்தில் பலதுறை சார்ந்தவர்களும், பல தரப்பட்டவர்களும் இருப்பதாகத் தகவல்.

எப்படியோ, யார் குற்றினாலும் அரிசியே தேவை. இனப்பிரச்சினை, போர் மற்றும் தமிழர்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு முடிவு கிடைக்கும், விடிவு பிறக்கும் என்று நம்பலாமா? ★

**உதயகாந்தன்**

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் மீண்டும் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ். பிரிவு செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் நேற்று முதல் யாழ். போதனா வைத்தியசாலையில் மீண்டும் தொண்டர் சேவையை ஆரம்பித்துள்ளனர்.

ஆஸ்பத்திரியின் காவல் கடமையிலும் —

நோயாளர்களைப் பார்வையிடுபவர்களுக்கு பாஸ் வழங்கும் சேவையிலும் — மட்டும் முன்பு ஈடுபட்டுவந்த இத் தொண்டர்களின் சேவை தற்போது ஆஸ்பத்திரியின் ஏனைய சில பிரிவுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

வெளி நோயாளர் பிரிவில் இருந்து வார்ட்டுகளுக்கு நோயாளரை எடுத்துச் செல்லல், சத்திரசிகிச்சைப் பிரிவில் இருந்து நோயாளரை,வார்ட்டுகளுக்கு எடுத்துச் செல்லல், மேல்மாடி நோயாளரை மேலே தூக்கிச் செல்ல உதவுதல் போன்ற சேவைகளிலும் அவர்கள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

(இ 15)

### கொழும்பில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் பிற்பகல் 2.15 மணியளவில் வத்திக்கான் தூதரகத்தில் ஓய்வு எடுத்த பாப்பரசர் அங்கிருந்து பம்பலப்பிட்டி பொலிஸ் பூங்காவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கிருந்து விசேட ஹெலிக்கொப்ரர் மூலம் பாப்பரசர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கினார்.

அங்கு அவருக்கு பூரண அரச மரியாதை அளிக்கப்பட்டது.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மற்றும் அமைச்சர்கள், படை அதிகாரிகள், வெளிநாட்டுத் தூதர்கள் ஆகியோர் விமான நிலையத்தில் பாப்பரசரை வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 5 மணியளவில் பாப்பரசரும் அவரது குழுவினரும் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு எயர் லங்கா விமானத்தில் புறப்பட்டனர்.

### 4 வருடங்களாக வரட்சி!

## பாப்பரசர் வந்த பின்னர் சிட்னியில் கடும் மழை!

சிட்னி, ஜன. 22

பாப்பரசரின் விஜயத்தைத் தொடர்ந்து ஆஸ்திரேலியாவின் தலைநகர் சிட்னியில் கடும் மழை பெய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவின் சில பகுதிகளில் கடந்த நான்கு வருடங்களாக [illegible] பாப்பரசரின் [illegible] அடுத்து அப்பகுதிகளிலும் பருவ மழை பெய்ய [illegible]

(ஒ-5)

## மாணவருக்கு பயணஒழுங்கு

வவுனியா இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரியைச் சேர்ந்த முதலாம், இரண்டாம் வருட மாணவர்கள் வவுனியா செல்வதற்கு நாளை திங்கள் கிளாலியூடாக பயண ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

பயணத்துக்கு வசதியாக வலிகாமம் பகுதி மாணவர்களை நாளை பிற்பகல் 2 மணிக்கு யாழ்- மத்திய பஸ் நிலையத்திலும், தென்மராட்சி பகுதியைச் சேர்ந்தவர்களை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்திலும், வடமராட்சியைச் சேர்ந்தவர்களை பிற்பகல் 3 மணிக்கு கொடிகாமம் பஸ் நிலையத்திலும் சமூகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ)

### அவசர....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் இங்கிலாந்து, நோர்வே, நெதர்லாந்து ஆகியன உதவியாக வழங்கவுள்ளன என்றும் எஞ்சிய நிதியை அரசு வழங்கும் என்றும் —

கல்வி, வீதிபுனரமைப்பு மின்சாரம், நீர்ப்பாசனம், தபால் தொலைத் தொடர்பு கூட்டுறவு, சுகாதாரம் போன்ற துறைகளின் அபிவிருத்திக்கு திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புனர்வாழ்வுத் திட்டத்துக்குத் தேவையான பூர்வாங்க செயற் திட்டத்தை தயாரிக்க இங்கு வந்துள்ள குழுவினர் இன்று குடாநாட்டின் பல பகுதிகளையும் பார்வையிடவுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் குழுவினர் இன்று சந்திக்கவுள்ளனர்.

(ஐ-4)

### செயலமர்வு

ஆண்டு 3 புதிய பாடத் திட்ட அறிமுகத்திற்கான சேவைக்காலச் செயலமர்வு நாளை திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் — யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம் — கன்னியர் மடம் ம. வி.,

வேலணை — புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி., உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி

ஊர்காவற்றுறை — கரம்பொன் சண்முகநாத வித்தி., அரியாலை. (ஓ-4)

### ஆலயங்களில்

கொழும்புத்துறை பாண்டியன் தாழ்வு ஸ்ரீ நரசிம்ம ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்று 21 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்

உற்சவ தினங்களில் தினமும் மாலை 6-30 மணிக்கு பிரம்மஸ்ரீ வை.- நித்தியானந்த சர்மாவினால் ''கம்பராமாயணம்''தொடர் சொற்பொழிவு நடத்தப்படும். (க-30)

### அன்பளிப்பு

தென்மராட்சி, ஜன. 22

இயக்கச்சி அ. த. க. பாடசாலையில் கல்வி பயிலும் 124 மாணவிகளுக்கு வழங்கவென 30 ஆயிரம் பெறுமதியான உடுபிடைவைகளையும் இப்பாடசாலையில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் தலா நான்கு அப்பியாசக் கொப்பிகளையும் முகமாலை பங்குத்தந்தை அருட்திரு ஸ்ரெலின் அடிகள் வழங்கியுள்ளார்.

(ஓ-117)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE CEYLON

## யாழ்ப்பாணக் கல்லூரி

பட்டதாரிப் பிரிவு,
464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

### க.பொ.த. (உயர்தரம்) - 95 ஆகஸ்ட்
## துரித மீட்டல் பயிற்சி நெறி

கிழமை நாட்களில் காலை 8-45 மணி முதல் பிற்பகல் 1-15 மணிவரை வகுப்புக்கள் அனுபவம் பெற்ற பிரபல ஆசிரியர் குழுவால் நடத்தப்படும். வினா - விடைகளும், பாடக்குறிப்புக்களும் வழங்கப்படுவதோடு, செய்முறைப் பயிற்சிகளும் நடத்தப்படும்.

மிகச்சொற்ப அளவிலான மாணவர்களே வகுப்புக்களில் அனுமதிக்கப்படுவர். விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்களால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பெறுபேறுகளுடன் 29 01-1995 ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பதாக விண்ணப்பிக்கவும்.

பாடங்கள்

1. தூயகணிதம்
2. பிரயோக கணிதம்
3. பௌதிகவியல்
4. இரசாயனவியல்
5. தாவரவியல்
6. விலங்கியல்
7. கிறிஸ்தவம்
8. ஆங்கில இலக்கியமும் ஆங்கிலமும்

பயிற்சிக் காலம் ஆறு மாதங்கள்

பாடம் ஒன்றுக்குரிய கட்டணம் ரூபா **300/-**

— இயக்குநர்.

(சி-308)


## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் சிவஞானம்
### (செல்லத்துரை)

வேலணை மேற்கை (சிற்பனை) பிறப்பிடமாகவும், 44/14, சங்கிலியன் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவஞானம் (செல்லத்துரை) நேற்றுக் காலமானார்.

இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், தில்லைச்செல்வி (பாமா), இராசேஸ்வரன் (ஆசிரியை யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புத் தந்தையும், இராசரத்தினம் இராசேஸ்வரன் (ஆசிரியர், யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம், யா/வேலணை மேற்கு நடராசா வித்தியாசாலை) அவர்களின் அன்பு மாமனாரும், மோகனசரன், விதுரசரன், கேதுசன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை (22-01-95) பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து செம்மணி இந்து மயானத்திற்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
இ. இராசேஸ்வரன்
(மருமகன்)

இல. 44/14, சங்கிலியன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(34807)

### கணபதிப்பிள்ளை கந்தையா

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கந்தையா புங்குடுதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சற்குணத்தின் அன்புக் கணவரும், விமலாதேவி, விமலரஞ்சி, நிர்மலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், மாணிக்கவாசகர், கிருபராசா, பாலச்சந்திரன் (பாலன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மனோகரன், சாந்தி, தனிசா, மஞ்சி, துஷி, தர்ஷினி, கோகிலன், சிவப்பிரியன் ஆகியோரின் அன்புப் பேரனும், கண்மணி, சின்னம்மா, பொன்னம்மா, கார்த்திகேசு, தம்பையா, கண்ணம்மா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் நாகம்மா, சுப்பிரமணியம், பரிமளம், பராசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் புங்குடுதீவில் நடைபெற்றன. துக்க நிகழ்வு இன்று (22-01-95) ஞாயிற்றுக்கிழமை யாழ். ஸ்ரீதர் தியேட்டர் முன் ஒழுங்கையில் உள்ள இவரின் மருமகன் பாலனின் இல்லத்தில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்கின்றேன்.

தகவல்:
சு. பாலச்சந்திரன்
[பாலன் - மருமகன்]

ஸ்ரீதர் தியேட்டர் முன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்

(34808)

### கார்த்திகேசு வயிரவிப்பிள்ளை

இணுவில் கிழக்கை பிறப்பிடமாகக் கொண்ட கார்த்திகேசு வயிரவிப்பிள்ளை 18-1-95 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற கார்த்திகேசு — நாகமணி தம்பதிகளின் அன்பு மகனும், சின்னம்மாவின், அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான. அன்னலிங்கம், சோமசுந்தரம், இராசையா, மகாலிங்கம், செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோரஞ்சிதம், செல்வரட்ணம் — விஜயரட்ணம் (செல்வம் பிறதேர்ஸ், மன்னார்), யோகேஸ்வரி, பவளமணி, இராசேந்திரம் (அண்ணா தொழிலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாலிங்கம், புவனேஸ்வரி, செல்வராணி, சோதிமலர், காலஞ்சென்றவர்களான நடராசா, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மாமனாரும், வதனி, குகன், சாந்தினி, ஜெயந்தினி, மோகனராஜ், பரதன், குமுதினி, அமுதன், உருத்திரகுமார், பூர்ணிமா, தயாளினி, செந்தில்குமாரி, குகன், அன்பரசி, ஜீவரசி, மணிமாறன், எழிலரசி, காண்டீபன், அருள்வாணி, சிவசங்கரன், சிந்து, நமணன், ரவிசங்கர், சாரங்கன், தாட்சாயினி, லக்ஸ்சாயினி ஆகியோரின் அன்புப் பேரனும், தர்ஷி, கீர்த்தனா, சயந்தன், நிஷாந்தன், ராஜகுலன், லோஜனா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (22-1-95) பிற்பகல் 1 மணியளவில் இணுவில் பூவோடை மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நன்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
வ. செல்வரட்ணம்
(மகன்)

கொக்கன்வளவு,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

(34809)

### புலிகளின் குரல் வானொலியில்

22 01 — 1995

ஞாயிறு இரவு

★ 8-01 இசையரங்கம்— பாட்டு: திரு. பொன். ஸ்ரீ. வாமதேவன்
★ 8 30 — செய்திகள்
★ 8-40 —தொடர் நாடகம் — கருணைரவி எழுதும் "காணி நிலம் வேண்டும்" அங்கம்—02
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்

23 — 01 — 1995

திங்கள் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

### தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

ஞாயிறு மாலை

★ 5-01 சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக்கீதம்
★ 5 10 — புதியவை
★ 5-15—மழலைகளுக்காக
★ 5-30 — கதம்பம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 7-02 —உங்கள் தெரிவு

### விளையாட்டு நிகழ்வுகள்

ராஜன் விக்ரம் சுற்றுக் கிண்ணத்துக்காக கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு;-

★ காலை 8.30 மணி — உதயன் வி.க அணி எதிர் ஜொலிஸ்ரார் வி.க அணி
★ பிற்பகல் 1 30 மணி — கே.சி.சி.சி அணி எதிர் சென்றலைட் அணி. (இ 20)

# ஆசிரியர்களுக்கான ஆக்க ஓவியப்போட்டி

## கோட்ட ரீதியாக போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ்ப்பாணம் வலயம் ஒன்றைச் சேர்ந்த அனைத்து ஆசிரியர்களுக்கான ஆக்க ஓவியப் போட்டி (1995) எதிர்வரும் மார்ச் 4ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி எதிர்வரும் சிவராத்திரி தினமான பெப்ரவரி 27இல் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

1994ஆம் ஆண்டுக்கான ஆக்க ஓவியப் போட்டி முடிவுகள் கோட்ட ரீதியாக வருமாறு:-

**யாழ்ப்பாணக் கல்விக் கோட்டம்:**

1 ஆம் இடம் செ. ஸ்ரீலோகநாதன், புனித பத்திரிசியார் கல்லூரி.

2 ஆம் இடம் ப. தனுஜா, நாவாந்துறை றோ. க. வி.

3 ஆம் இடம் அ. வாசுகி, கொட்டடி நமசிவாய வித்தி.

**நல்லூர் கல்விக் கோட்டம்**

1 ஆம் இடம் சி சிவகௌரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி

2 ஆம் இடம் பொ. ஞானதேசிகன், யாழ். இந்துக்கல்லூரி.

2 ஆம் இடம் சு. சுகி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

**சாவகச்சேரி கல்விக் கோட்டம்**

1 ஆம் இடம் செல்வி ப தயாநிதி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

2ஆம்இடம் திரு.சி சின்னத்தம்பி, து.சி. அமிர்தாம்பிகை வித்தியாலயம், சாவகச்சேரி.

3ஆம் இடம் திரு சி.பொ. ராஜகுலசிங்கம், கைதடி நவில்ட் பாடசாலை.

**வேலணை கல்விக் கோட்டம்**

1 ஆம் இடம் ஐயாத்துரை தயாநிதி, புங்குடுதீவு ம. வி.

2 ஆம் இடம் மாலதி செல்லச்சாமி, அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி.

3 ஆம் இடம் ஞானமணி இரத்தினசிங்கம், வேலணை சைவப்பிரகாச வித்தி

**ஊர்காவற்றுறை கல்விக் கோட்டம்**

1 ஆம் இடம் திருமதி கோ. செல்வநாதன், காரைநகர் கலாநிதி ஆ தியாகராசா ம. வி.

2ஆம் இடம் மோகனாம்பிகை கஜமுகவரதன் காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி

3 ஆம் இடம் செல்லத்தம்பி மகேசு, ஊர்காவற்றுறை கல்விக் கோட்டம்.

### மேலும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படும் என்றும் — ஆயுதத் தளபாடங்கள், வெடிப்பொருள்கள், எரிபொருள்கள், யூரியா உட்பட ஏழு பொருள்கள் மீதான தடை தொடர்ந்து இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தற்போது பின்வரும் பொருள்களின் தடை நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது:

1. எலக்ரோனிக் பொருள்கள்,
2. மின்சாரக் கம்பிகள்,
3. அலுமினியம்,
4. மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள்,
5. தங்கம்,
6. இரசாயனப் பொருள்கள்,
7. அச்சகப் பொருள்கள்,
8. பெண்ரோச் பற்றறிகள் தவிர்ந்த ஏனைய சகலவிதமான பற்றறிகள். (இ-4)

### மதத் தலைவர்களை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கு மலர் மாலை அணிவித்து வரவேற்றார்.

இந்து மதத் தலைவர்கள் ஆறு பேரும் மற்றும் இராமகிருஷ்ண மிசனைச் சேர்ந்த தலைவர்கள், அகில இலங்கை முஸ்லிம் கோட்பாட்டுச் சபையின் மௌலவிகள் ஐவர் உட்பட 6 முஸ்லிம் மத தலைவர்கள் அந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

கலாசார சமய விவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடியும் அதில் கலந்து கொண்டு உரையாற்றினார்.


## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பவ வருஷம் தைத்திங்கள் 12-ஆம் நாள் (26 01-1995) வியாழக்கிழமை முற்பகல் 9-24 முதல் 11-00 மணிவரையுள்ள மீன லக்கினமும் அனுச நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்

திரு. திருமதி கா. கார்த்திகேசு
தம்பதிகளின் புத்திரன்
திருவளர் செல்வன்
**ஜெகதீசன் (ஜெகா)**
ந. வைத்திலிங்கம் நிறுவனம்,
யாழ்ப்பாணம்.
அவர்களுக்கும்

திரு. திருமதி கனகசுந்தரம்
தம்பதிகளின் புத்திரி
திருவளர் செல்வி
**வனிதா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் கொண்டு மணமகளில்லத்தில் திருமணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும் ★

திருமதி க. கார்த்திகேசு
திரு. திருமதி கா. மாணிக்கவாசகர்
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

திருமதி இ. கனகசுந்தரம்
[தெல்லிப்பளை]
"ஞானகிரி"
வசந்தி வீதி (லவ்லேன்),
உடுவில்.

(34806)

அருள் முருகன் ஜுவலர்ஸ்ஸின்
வாடிக்கையாளர்களுக்கு

## ஓர் அன்பான வேண்டுகோள்

அருள் முருகன் 'ஜுவலர்ஸ்"
என்னும் பெயரில் இயங்கிய எமது ஸ்தாபனம்

### அருள் முருகன் நகை அகம்

என மாற்றியுள்ளோம் என்பதை அறியத் தருகிறோம்.

உங்கள் தங்க நகைகளை விற்க வரும்போது தவறாது உங்கள் அடையாள அட்டை அல்லது குடும்ப அட்டையை கொண்டு வரும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி

# அருள் முருகன் நகை அகம்

96/1, சந்தோசம் தெரு
(கஸ்தூரியார் வீதி),
யாழ்ப்பாணம்.

கிளை
இவா நகை மாடம்
யாழ் வீதி, சாவகச்சேரி.

(34796)

அன்புடன் அழைக்கிறோம்

சிறுவர் போசாக்கு
பராமரிப்பு பூங்கா
பொம்மைவெளி யாழ்ப்பாணம்

## 2 ஆம் ஆண்டு
# நிறைவு விழா

இன்று (22 - 01 - 1995)
ஞாயிறு மாலை 3.00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

பாண்ட் வாத்திய இசை — பூங்கா சிறுவர்கள்
தேசிய கொடியேற்றல் — திரு. ந. வெள்ளை
வலிகாமம் கோட்ட பொறுப்பாளர்
பூங்கா கொடியேற்றல் — திரு. குட்டி
பொறுப்பாளர் சிறுவர் பாதுகாப்புத் திட்டம்
யாழ். மாவட்டம்
மங்கள விளக்கேற்றல் — செல்வி ஜனனி
பொறுப்பாளர் செஞ்சோலை
திரு. றமேஸ் அப்பா
பொறுப்பாளர் காந்தருபன் அறிவுச்சோலை
தமிழ்த்தாய் வாழ்த்து — பூங்கா சிறுவர்கள்
வரவேற்பு நடனம் — பூங்கா சிறுவர்கள்
வரவேற்புரை — திருமதி சி. வசந்தமலர்
ஆசிரியை
தலைமையுரை — திரு. எ. பிரான்சிஸ்
பூங்கா நிர்வாகி

சிறப்புரைகள் —
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
பரமாச்சாரிய சுவாமிகள்
நல்லை ஆதீனம்
பேராசிரியர் சி. யோ. இம்மானுவேல்
அடிகளார்
குருமுதல்வர் ஆயர் இல்லம்
திரு. சு. ப. தமிழ்ச்செல்வன்
பொறுப்பாளர் அரசியல் துறை தமிழீழம்
பேராசிரியர் ந. பாலகிருஷ்ணன்
தலைவர் பொருளியல் துறை
யாழ். வளாகம்
செல்வி தணிகைச்செல்வி
பொறுப்பாளர் மகளிர் அமைப்பு
யாழ்ப்பாண மாவட்டம்
திரு. சொலமன் சூ. சிறில்
தலைவர் யாழ். ப. நோ. கூ. சங்கம்
வைத்தியகலாநிதி மனோ
வைத்தியகலாநிதி
ரீ. டபிள்யூ. ஜெயகுலராஜா
முகாமைப் பணிப்பாளர்
பரியோவான் கல்லூரி யாழ்ப்பாணம்
செல்வி ப. கோமதி ஆசிரியை
வாழ்க்கைத்திறன் கல்வி நிலையம்
திரு. சி. இளம்பரிதி
பொறுப்பாளர் அரசியல் துறை
யாழ்ப்பாண மாவட்டம்

2 ஆம் ஆண்டு சிறப்பு மலர் வெளியீடு
பிரதி வழங்குபவர்
திரு. வ. செல்வராசா
சிறப்புத் தளபதி

பெறுபவர்கள்:-
பொதுத்தாபனங்களின் பிரதிநிதிகள்

நன்றியுரை —
திரு பொ. செந்தமிழன்
பொறுப்பாளர் யாழ் வட்டம்

கலை நிகழ்ச்சிகள்
பூங்கா சிறுவர்கள்
கலை பண்பாட்டுக் கழகம்

நன்றி! வணக்கம்

சிறுவர் பாதுகாப்புத் திட்டம்
அரசியல்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
யாழ்ப்பாண மாவட்டம்
தமிழீழம்.

விளம்பர அன்பளிப்பு:
**வணிகர் கழகம்**
யாழ்ப்பாணம். (சி-413)


## நீங்கா நினைவலைகள்

பேராசிரியர்
**கலாநிதி சு. வித்தியானந்தன்**
(முன்னாள் துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

தோற்றம்: 08 — 05 — 1924
மறைவு: 22 — 01 — 1989

தமிழர் தலைநிமிர,
தமிழர் பாரம்பரியம் வளர்த்து,
தமிழர் தொன்மை சிறக்க
தமிழர் நாட்டாரியல் வளர்த்து
தரணியில் உயர்ந்தோனே
தமிழாராய்ச்சி ஈழமண்ணில்
தளைத்தோங்கச் செய்தோனே
உம் தன் நினைவு
வாழ்க வாழ்க
பல்லாண்டு வாழ்க!

— குடும்பத்தினர்.

(சி-408)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) இமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, விலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22 - 01 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org